## நெல்

முன்னையவாண்டிலும் பார்க்க, 1964ம் ஆண்டில் நெல்லுற்பத்தி கூடிய வீதத்தில் அதிகரித்தது. முன்னைய பெரும்போக காலத்தில் உற்பத்தி செய்யப் பட்ட 316 இலட்சம் புசல்களுடன் ஒப்பு நோக்கும் பொழுது, இவ்வாண்டின் பெரும் போக உற்பத்தி 321 இலட்சம் புசல்களாக உள்ளது முன்னையவாண்டின் சிறு போகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 176 இலட்சம் புசல்களுடன் நோக்கும் பொழுது, 1964ம் ஆண்டின் சிறுபோக உற்பத்தி 184 இலட்சம் புசல்களாக உள்ளது. ஆகவே, இவ்விரு பருவங்களினதும் மொத்த உற்பத்தி 1963ம் ஆண்டில் 492 இலட் சம் புசல்களாயிற்று. 1964ம் ஆண்டில் 505 இலட்சம் புசல்களாக அதிகரித்தது. 1963ம் ஆண்டிலேற்பட்ட 2·3 சதவீத உயர்வுடன் நோக்கும் பொழுது இவ்வதிகரிப்பு 2·6 சதவீதமாகும். 1963ம் ஆண்டில் 37·9 புசல்களிலிருந்து சராசரி ஏக்கருக்கான விளைவும் (திருத்தியமைக்கப்பட்டது) 1964ம் ஆண்டில் 38·8 புசல்களுக்கு உயர்ந்தது.

அரிசி நியதியின்படி கணிக்கையில், நெல்லுற்பத்தி 1963ம் ஆண்டின் 668,407 தொன்களுக் கெதிராக, இவ்வாண்டு 686,779 தொன்களாயிற்று. அரிசி இறக்கு மதிகள் 1963ம் ஆண்டு 510,000 *தொன்களிலிருந்து, 1964ம் ஆண்டு 547,000 தொன் களுக்கு அதிகரித்தன. உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப் பட்ட நெல்லின் அளவு 1963ம் ஆண்டிலிருந்த 278 புசல்களிலிருந்து, 1964ம் ஆண்டு 298 இலட்சம் புசல்களுக்கு அதிகரித்தது. 1963ம் ஆண்டு 1,137,954 (திருத்தியமைக் கப்பட்ட எண்கள்) தொன்களாக விளங்கிய அரிசியின் மொத்த நுகர்ச்சியுடன் ஒப்பு நோக்கும் பொழுது 1964ம் ஆண்டு 1,138,944 தொன்களென அது தற்காலிகமாக மதிக்கப்பட்டுள்ளது.

*உணவு ஆணையாளரின் எண்தொகை.

## (ஆ) வெளிநாட்டு வர்த்தகம்

பொதுப்படையான போக்குகள்:

சுங்கத் திணைக்களப் புள்ளி விபரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தைப் பற்றிய மொத்தத் தரவினை அட்டவணை II (ஆ) 1 கொடுக்கிறது.

அட்டவணை II ஆ—1

### வெளிநாட்டு வர்த்தகம், 1959 – 1964

| வருடம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | இறக்குமதிகளுக்கு ஏற்றுமதிகளின் சதவீத விகிதப்படி |
|---|---|---|---|---|
| | ஏற்றுமதிகள் * (க. ஏ. வி.) | இறக்குமதிகள் (கொ. கா. க.) | வர்த்தக நிலுவை | |
| 1959 | 1754 | 2005 | —251 | 87 |
| 1960 | 1832 | 1960 | —128 | 93 |
| 1961 | 1733 | 1703 | + 30 | 102 |
| 1962 | 1808 | 1660 | +148 | 109 |
| 1963 | 1731 | 1490 | +241 | 116 |
| 1964 | 1876 | 1975 | — 99 | 95 |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்

* திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்டவையும் அடங்கும்.

† 1963ம் ஆண்டு இறக்குமதிகளின் திருத்தியமைக்கப்பட்ட எண்தொகை

இலங்கையின் ஏற்றுமதிகளின் பெறுமதி, 1964ல் ரூபாய் 18760 இலட்சங்களாக அமைந்திருந்தது. சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில், இது ரூபாய் 1450 இலட்சங் களால் அல்லது 8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இறக்குமதிகளின் பெறுமதி மிகக் கூரிய முறையில் அதிகரித்தது. அவை, ரூபாய் 19750 இலட்சங்களால் அமைந்து, இதுவரை வருடாவருடம் பதிவு செய்யப்பட்ட தொகைகளில் இரண் டாவது மிகக் கூடிய தொகையாக விளங்கின. மிகக் கடுமையான இறக்குமதி

உத்தரச் சீட்டுக் கட்டுப்பாடு இருந்தும், சென்ற ஆண்டிலும் பார்க்க இந்த இறக்குமதிகள், ரூபாய் 4850 இலட்சங்களால் அல்லது 33 சதவீதத்தால் கூடின. சுங்கத் திணைக்களத் தரவின்படி வர்த்தக நிலுவை, ரூபாய் 990 இலட்சங்களைக் கொண்ட குறையைப் பதிவு செய்துள்ளது. இந்த நிலைமை, 1963, 1962ம் ஆண்டுகளோடு ஒப்பிடுகையில், கூரிய மாறுபாட்டைக் காட்டுகிறது. இவ் ஆண்டுகளில் பெருமளவு மிகுதிகள், அதாவது ரூபாய் 2410 இலட்சங்களையும், ரூபாய் 1480 இலட்சங்களையும் முறையே பதிவு செய்துள்ளன சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில், இறக்குமதிகளுக்கு ஏற்றுமதிகளின் சதவீத விகிதாச்சாரம் 116ல் இருந்து 95 ஆக வீழ்ச்சியுற்றது.

கொழும்புத் துறைமுகத்தின் குழப்ப நிலைமைகள் பற்றி, 1963ம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கையில் எடுத்துக் கூறப்பட்டது. இக் குழப்ப நிலைமைகள் சென்ற ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களின்போது ஏற்றுமதி இறக்குமதி ஓட்டத்தில் பாதகமான விளைவுகளைக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. எனினும், இந்த நிலைமைகளில் 1964ல் குறிப்பிடத்தக்க திருத்தங்கள் ஏற்பட்டனவென்பதை இங்கு பதிவு செய்தல் அவசியம். சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில் துறைமுகம் கையாண்ட கப்பற் சரக்கின் தொகை 140,873 தொன்களால் அல்லது 30 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட கப்பற் சரக்கின் தொகை. 173,803 தொன்களால் அல்லது 9 சதவீதத்தால் அதிகரித்துளது. இந்தத் திருந்திய நிலைக்கு அமைய கொழும்பிற்கு[2] அனுப்பப்பட்ட கப்பற் சரக்குகளுக்கு விதிக்கப்படும் கப்பற் கூலியின் மேலதிகக் கட்டணங்கள் சில கப்பற் போக்குவரத்து நிறுவனங்களால் குறைக்கப்பட்டன.

---

1. எனினும், இந்த இறக்குமதிகளின் அளவு பற்றி விளக்கம் செய்யும்போது, ஒரு முக்கிய அம்சம் கவனிக்கப்பட வேண்டும் 1963ம் ஆண்டு அறிக்கையின் 57ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பில் குறிப்பிட்டதற்கமைய, ஒரு தரப்பட்டகாலப் பகுதியில் சுங்கத் திணைக்களத்தில் உண்மையாகவே. பெற்று வெளியேற்றப்பட்ட இறக்குமதிகளின் பெறுமதிக்கும் சுங்கப்பதிவேடுகளில் பிரதிபலிக்கப்பட்டிருக்கும் இறக்குமதிகளின் பெறுமதிக்கும் கணிசமான வேறுபாடு இருக்கக்கூடும். இச்சுங்கப் பதிவேடுகளில் இருந்துதான் சுங்கப் புள்ளி விபரங்கள் பெறப்படுகின்றன. இறக்குமதிகளை சுங்கத் திணைக்களத்தில் இருந்து வெளியேற்றுவதற்கும், சுங்கப் பதிவேடுகளில் பதியப்படுவதற்கும் இடையில் குறிப்பிடத்தக்க கால இடைவெளியிருப்பின் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இவ்விரு பெறுமதிகளிடையே காணப்படக்கூடும். இது அரசாங்க இறக்குமதிகளுக்கு தனித் தொடர்புடையதோடு அரிசி, மா, சீனி, முதலிய குறித்த இறக்குமதிகளுக்கு மிக நெருங்கிய தொடர்புடையது. இம்மூன்று பொருட்களின் இறக்குமதி மொத்த இறக்குமதிகளின் பெரும்பாகமாய் உள்ளன. கீழ்க்காணுபவை, 1963, 1964க்குரிய இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, மா, சீனி முதலியவற்றின் மொத்தப் பெறுமதியின் ஒப்புவமை எண் தொகையாகும். இவை இக்காலத்து சுங்கத் தரவுகளையும் உணவு ஆணையாளரால் உண்மையில் பெறப்பட்ட இறக்குமதிகளையும் அடிப்படையாகக் கொண்டவை

| | உணவு ஆணையாளர் பெற்ற இறக்குமதிகள் | சுங்கப் புள்ளிவிபரங்களில் பிரதிபலிக்கப்பட்ட இறக்குமதிகள் | பத்து இலட்சம் ரூபாய்கள் வேறுபாடுகள் |
|---|---|---|---|
| 1963 | 460 | 322 | —138 |
| 1964 | 557 | 648 | + 91 |

ஆகவே 1963ல் சுங்கத்தரவு இறக்குமதிகளில் ரூபாய் 1380 இலட்சங்களை குறைத்து மதிப்பீடு செய்துவிட்டு, 1964ல் இறக்குமதிகளிலே ரூபாய் 910 இலட்சங்கள் கொண்ட மிகை மதிப்பீட்டைக் கூறுகிறது.

சுங்கத்தரவில் பதிவு செய்யப்பட்டவைக்கமைய 1963, 1964க்குரிய இறக்குமதிக் கூட்டுத்தொகையை, உணவு ஆணையாளர் பெற்ற உண்மை இறக்குமதியைப் பிரதிபலிக்கத் தக்க முறையில் அமைப்பின், பொதுப்படைப் போக்கு இவ்விதமே அமைந்திருக்கும்.

| | 1963 | 1964 |
|---|---|---|
| ஏற்றுமதிகள் ; .. . | 1.731 | 1,876 |
| இறக்குமதிகள் : (திருத்தியமைக்கப்பட்டது) | 1,628 | 1,884 |
| வர்த்தக நிலுவை .. .. | + 103 | — 8 |

ஆகலால், இந்த அடிப்படையில் 1963ல் ரூபாய் 2410 இலட்சங்களாய் இருந்த மிகை, ரூபாய் 1030 இலட்சங்களாக வீழ்ச்சியுறுகின்றது. இதனால் 1964ல் ரூபாய் 990 இலட்ச பணக் குறைவு, ரூபாய் 80 இலட்சமாகச் சுருங்கியது.

1. இத்திருந்திய நிலையின் பிரதிபலிப்பை கொழும்புத் துறைமுகத்தினால் கையாளப்பட்ட கப்பற் சரக்கின் புள்ளி விபரங்கள், எடுத்துக் காட்டுகின்றன.

### கொழும்புத் துறைமுகத்தினுல் கையாளப்பட்ட இறக்குமதி, ஏற்றுமதிப் பொருட்கள்

| | 1963 | 1964 | கப்பலில் ஏற்பட்ட தொன்களின் மாற்றம் — நிறைவு | கப்பலில் ஏற்பட்ட தொன்களின் மாற்றம் — சதவீதம் |
|---|---|---|---|---|
| 1ம் கால் | 653,384 | 650,674 | — 2,710 | ... |
| 2ம் கால் | 588,572 | 690,937 | +102,365 | + 17 |
| 3ம் கால் | 608,535 | 719,905 | +111,370 | + 18 |
| 4ம் கால் | 562,475 | 666,126 | +103,651 | + 18 |
| ஆண்டு | 24,12,966 | 27,27,642 | +314,676 | + 13 |

மூலம்: துறைமுக (கப்பற் சரக்கு) கூட்டுத்தாபனம்

2 பின்வருபவை கழிவுகளின் விபரங்களைக் காட்டுகின்றன.

(1) பிரித்தானியாவும் ஐரோப்பாவும்—கொழும்பு மகாநாடு.

ஆடி 6, 1964 — அடிப்படைக் கப்பற் கூலியின் 50 சதவீதக் கட்டணம் 40 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

ஐப்பசி 15, 1964 — 30 சதவீதத்திற்கு மேலதிகக் கட்டணம் குறைக்கப்பட்டது.

தை 1, 1965 — 20 சதவீதத்திற்கு மேலதிகக் கட்டணம் குறைக்கப்பட்டது.

(2) அவுஸ்திரேலியா—நியூசிலந்து—கொழும்பு மகாநாடு.

(அ) அவுஸ்திரேலியா—கொழும்பிற்கு அனுப்பப்பட்ட இறக்குமதியின்

புரட்டாதி 1, 1964 — மேலதிகக் கட்டணம் 35 சதவீதத்தில் இருந்து 25 சதவீதத்திற்குக் குறைக்கப்படடது. அத்துடன் இலங்கையின் ஏனைய துறைமுகங்களுக்கு அனுப்பப்பட்ட இறக்குமதிகள் 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

(ஆ) நியூசிலந்து—கொழும்பிற்கு அனுப்பப்பட்ட இறக்குமதியின்

ஆவணி 3, 1964 — மேலதிகக் கட்டணம் 35 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. அத்துடன் திருக்கோணமலைக்கு அனுப்பப்பட்ட இறக்குமதிக்கு மேலதிகக் கட்டணம் 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

அட்டவணை II (ஆ) 2 ஏற்றுமதிகளின் அமைப்பைத் தருகின்றது.

### அட்டவணை II ஆ—2
### ஏற்றுமதிகளின் அமைப்பு

| பண்டம் | பெறுமானம் பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | மொத்த இறக்குமதிகளின் சதவீதமாக | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 |
| தேயிலை .. .. | 1096 | 1115 | 1149 | 1140 | 1142 | 60 | 64 | 64 | 66 | 61 |
| இரப்பர் .. .. | 378 | 260 | 290 | 257 | 290 | 21 | 15 | 16 | 15 | 15 |
| 3 பிரதான தெங்குப் பொருட்கள் .. .. | 184 | 202 | 227 | 198 | 273 | 10 | 12 | 13 | 11 | 15 |
| ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகள் .. .. | 117 | 104 | 100 | 110 | 137 | 6 | 6 | 5 | 6 | 7 |
| மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகள் .. .. | 1775 | 1681 | 1766 | 1705 | 1842 | 97 | 97 | 98 | 98 | 98 |
| திருப்பி ஏற்றப்பட்டவை .. | 57 | 52 | 42 | 26 | 34 | 3 | 3 | 2 | 2 | 2 |
| மொத்தம் .. | 1832 | 1733 | 1808 | 1731 | 1876 | 100 | 100 | 100 | 100 | 100 |

மூலம்: இலங்கைச் சுங்கட்புள்ளி விபரங்கள்

மொத்த ஏற்றுமதித் தொகுதியினளவில் ஏற்பட்ட விரிவே, ஏற்றுமதி வருமானங்களின் அதிரிப்பிற்கு வகை கூறுகின்றது. இதற்கான மகாவங்கிக் குறிகாட்டியின் 119 புள்ளிகள் 7 சதவீத உயர்ச்சியைக் காட்டுகின்றன. ஏற்றுமதிகளின் சராசரி விலையில் மாற்றமெதுவும் ஏற்படவில்லை. உண்மையில், தனிப்பட்ட பண்டங்களின் விலைகள் ஏற்றத் தாழ்வுகளுக்குட்பட்டிருந்த போதிலும், கடந்த நான்கு வருட காலமாகச் சகல ஏற்றுமதிகளினதும் சராசரி விலையிலே மாற்றம் ஒன்றிற் சிறிதளவாகவோ, அன்றி இல்லாமலோ இருந்தது. சகல ஏற்றுமதிகளி

னதும் சராசரி விலையானது, இக்காலப் பகுதியின் போது, கடந்த பத்துக்கு மேற்பட்ட வருடங்களுக்கான மிகக் குறைந்த ஒரு மட்டத்தை நிலையானதாகக் கொண்டு விளங்கியது. இவ்விலைமட்டம், 1957 லிருந்து 1960 வரையுள்ள ஆண்டுகளுக்குரிய சராசரி மட்டத்தைவிட, ஏறக்குறைய 9 சதவீதத்தாற் குறைவானதாகும்.

ஏற்றுமதி வருமானங்களில் ஏற்பட்ட அதிகரிப்பை, இவ்வருமானங்களின் பிரதான மூலங்கள் யாவும் பகிர்ந்து கொள்கின்றன. எனினும், அந்நிய செலாவணியைத் தேடித்தரும் முக்கியமான பொருளாகிய தேயிலையைப் பொறுத்தவரை, ஏற்றுமதி வருமான அதிகரிப்பு மிகச் சிறியதாகும்—அதாவது 20 இலட்சம் ரூபாய்கள் அல்லது 0·2 சதவீதமாகும். மொத்த வருமானங்களில் தேயிலையின் பங்கு, கடந்த வருடத்திலிருந்த 66 சதவீதத்திலிருந்து இவ்வருடம் 61 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. இவ் ஏற்றுமதிகளின் அளவு மாற்றமடையாதிருக்கையில், அவற்றின் சராசரி ஏற்றுமதி விலை, இறுத்தலுக்கு ரூபா 2·51 சதத்திலிருந்து, இறுத்தலுக்கு ஒரு சதத்தைக் கொண்ட அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

இறப்பரிலிருந்து பெற்ற வருமானம் 330 இலட்சம் ரூபாய்களால் அல்லது 13 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. மொத்த வருமானத்தில் அவற்றின் பங்கு, கடந்த வருடத்திலிருந்ததை விட ஒருமாற்றத்தையும் காட்டவில்லை. இறப்பர் ஏற்றுமதிகளின் அளவு 21 சதவீதத்தாற் கூர்மையாக உயர்வுற்றது. சகல இறப்பரினதும் சராசரி ஏற்றுமதி விலை இறுத்தலுக்கு ரூபா 1·15 சதமாக இருந்தது. இது கடந்த வருடத்திலிருந்ததிலும் பார்க்க, இறுத்தலுக்கு 8 சதவீழ்ச்சியைக் கொண்டிருந்தது.

வருமானங்களிலே மிகக் கூடிய அதிகரிப்பு, மூன்று பிரதான தெங்குப் பொருட்களிலிருந்தே பெறப்பட்டதாகும். இப்பொருட்களின் மொத்தப் பெறுமானம் 750 இலட்சம் ரூபாய்களால் அல்லது 38 சதவீதத்தால் உயர்ந்துள்ளது. மொத்த வருமானத்தில் இப்பொருட்களின் பங்கு, கடந்த ஆண்டிலிருந்த 11 சதவீதத்திலிருந்து இவ்வருடம் 15 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. இப்பொருட்களின் மொத்த ஏற்றுமதிகளினது அளவு 34 சதவீதத்தைக் கொண்ட ஒரு தீட்சணமான விரிவைக் காட்டியுள்ளது. தேங்காய் எண்ணெயினதும் கொப்பராவினதும் சராசரி ஏற்றுமதி விலைகள் முறையே 7 சதவீதத்தாலும் 4 சதவீதத்தாலும் அதிகரித்திருக்கையில், தேங்காய்த் துருவலின் ஏற்றுமதி விலை கடந்த வருடத்தில் இருந்ததுடன் ஒப்பிடுகையில், 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகளிலிருந்து பெற்ற வருமானங்கள், மொத்தத்தில் 270 இலட்சம் ரூபாய்களால் அல்லது 25 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. கயிற்றுத் தும்பினதும், கறுவாவினதும் ஏற்றுமதிகளின் பெறுமானம் முறையே 570 இலட்சம் ரூபாய்களாகவும், 250 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்து முறையே 36 சதவீதத்தாலும் 29 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது. திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்டவைகளின் பெறுமானம் 1959ம் ஆண்டிலிருந்த 620 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட மட்டத்திலிருந்து நிதானமாக வீழ்ச்சியுற்று, இவ்வாண்டின் போது 340 இலட்சம் ரூபாய்களாக இருந்து, 1963ம் ஆண்டிலிருந்து 31 சதவீதத்தைக் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியுள்ளது. கப்பற் கரிக்கலங்களினது திருப்பி ஏற்றுமதிகளின் பெறுமானம், 1963ம் ஆண்டில் 60 இலட்சம் ரூபாய்களால் அல்லது 35 சதவீதத்தால் விரிவடைந்தது.

முன் குறிப்பிடப்பட்டுள்ளபடியே சுங்கப்பதி வேடுகளில் பிரதிபலிக்கப்பட்டுள்ளதான 19750 இலட்சம் ரூபாய் கொண்ட மொத்த இறக்குமதிகளின் பெறுமானத்தில், 4850 இலட்சம் ரூபாய்களால் ஏற்பட்ட கூரிய அதிகரிப்பை அவதானத்துடன் விளக்குவது அவசியமாகும். மொத்த இறக்குமதி அளவிற்கான மகா வங்கியின் குறிகாட்டி, (இதுவும் சுங்கப் பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது) இவ்வருடத்தின் போது கூர்மையாக உயர்வடைந்துள்ளது. இது, இவ்வருடத்தில் 105 புள்ளிகளாக விளங்கி, கடந்த வருடத்திலிருந்ததைவிட 26 புள்ளிகள் கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது. அளவுகளிலே ஏற்படும் இவ்வதிகரிப்பானது, பிரதான பகுப்புகளுக்குரிய இறக்குமதிகளுக்கான தனித்தனிக் குறிகாட்டிகள் நுகர்வுப் பொருட்களிலும் முதலீட்டப் பொருட்களிலுமே அடங்கியுள்ளனவென்பதைக் காட்டுகின்றன. நுகர்வுப் பொருட்களுக்கான குறிகாட்டி

36 புள்ளிகளால் 101 புள்ளிகளுக்கும், முதலீட்டப் பொருட்களுக்கான குறிகாட்டி 11 புள்ளிகளால் 104 புள்ளிகளுக்கும் அதிகரித்துள்ளன. நடுத்தரமான பொருட்களின் குறிகாட்டி 1 புள்ளியாற் குறைவுற்று, 123 புள்ளியாக விளங்குகின்றது. நுகர்வுப் பொருட்களின் பகுப்பிலே, இவ்விரிவானது, "உணவும் குடிவகையும்", "ஆடை வகைகள்" "ஏனைய நுகர்வுப் பொருட்கள்" ஆகிய மூன்று உப தொகுதிகளையும் பாதித்துள்ளது. இவ்வுப தொகுதிகளின் தனித்தனிக் குறிகாட்டிகள், முறையே 125 புள்ளிகளையும், 92 புள்ளிகளையும் 39 புள்ளிகளையும், கொண்டிருந்தது. முறையே 40 புள்ளிகளாலும் 50 புள்ளிகளாலும் 14 புள்ளிகளாலும் அதிகரித்துள்ளன.

1963ம் ஆண்டில் இறக்குமதிகளின் சராசரி விலை 11 சதவீதத்தினால் உயர்வடைந்துள்ளது. இவ்விலை, 1964ம் ஆண்டின் போதும் குறைவான வீதத்தினுலெனினும், தொடர்ந்து அதிகரித்துள்ளது. இவ்விலையின் மகா வங்கிக் குறிகாட்டி கடந்த வருடத்திலிருந்ததை விட 2 புள்ளிகளால் உயர்வுற்று, 107 புள்ளிகளாக விளங்குகின்றது. நுகர்வுப் பொருட்களின் குறிகாட்டி 116 புள்ளிகளாக 5 புள்ளிகளால் அதிகரித்திருக்கும் பொழுது, நடுத்தரமான பொருட்களினதும், முதலீட்டப் பொருட்களினதும் குறிகாட்டிகள், முறையே 82 புள்ளிகளாகவும், 96 புள்ளிகளாகவும் முறையே 4 புள்ளிகளாலும், 2 புள்ளிகளாலும் வீழ்ச்சியடைந்துள்ளதை, பிரதான பகுப்புக்களிலுள்ள இறக்குமதிகளின் தனித்தனிக் குறிகாட்டிகள் காட்டுகின்றன. நுகர்வுப் பொருட்களின் பகுப்பிலே "உணவும் குடிவகையும்" என்னும் விடயத்தின் குறிகாட்டி, 115 புள்ளிகளாக 8 புள்ளிகளாலான ஒரு அதிகரிப்பையும் "ஏனைய நுகர்வுப் பொருட்கள்" என்னும் விடயத்தின் குறிகாட்டி, 129 புள்ளிகளாக 3 புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பையும் காட்டுகின்றன. "ஆடை வகைகள்" என்னும் விடயத்தின் குறிகாட்டி, 101 புள்ளிகளாக 3 புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியினைக் காட்டுகின்றது.

இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம், 1963ம் ஆண்டில் 9 சதவீத அளவினைக் கொண்ட ஒரு பாதகப் போக்கினுற் தாக்குண்டது. இத் தொடர்பில் 1964ம் ஆண்டிலே மேலும் பாதகமான போக்கொன்று காணப்பட்டது. வர்த்தக மாற்று விகிதத்தின் மகா வங்கிக் குறிகாட்டி, 86 புள்ளிகளுக்கு 3 புள்ளிகளாற் குறைவுற்றது. இது, 3 சதவீதத்தைக் கொண்ட ஒரு வீழ்ச்சியாகும்.

ஏற்றுமதிகள்

## தேயிலை

அட்டவணை II (ஆ) 3 தேயிலை உற்பத்தி, ஏற்றுமதி விலைகள் பற்றிய தரவுகளைக் கொடுக்கிறது.

அட்டவணை II ஆ—3

### தேயிலை-உற்பத்தியும், ஏற்றுமதிகளும், விலைகளும்

| வருடம் | உற்பத்தி | ஏற்றுமதிகள் | | கொழும்பு ஏலச் சராசரி விலைகள் இருத்தலுக்கு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | அளவு பத்து இலட்சம் இருத்தல் | அளவு பத்து இலட்சம் இருத்தல் | க. ஏ. பெ. விலை இருத்தலுக்கு ரூ. சதம் | உயர்ந்த பிரதேச ரூ. சதம் | மத்திய பிரதேச ரூ. சதம் | தாழ்ந்த பிரதேச ரூ. சதம் | சகல தேயிலைகளும் ரூ, சதம் |
| 1955 | 380 | 362 | 3·30 | 2·34 | 2·04 | 2·40 | 2·24 |
| 1956 | 376 | 348 | 3·00 | 2·50 | 1·96 | 1·88 | 2·16 |
| 1957 | 398 | 368 | 2·78 | 2·05 | 1·61 | 1·88 | 1·86 |
| 1958 | 413 | 411 | 2·75 | 2·11 | 1·51 | 1·48 | 1·73 |
| 1959 | 413 | 384 | 2·72 | 2·13 | 1·69 | 1·67 | 1·85 |
| 1960 | 435 | 410 | 2·67 | 2·03 | 1·75 | 1·83 | 1·88 |
| 1961 | 455 | 426 | 2·62 | 1·99 | 1·72 | 1·74 | 1·83 |
| 1962 | 467 | 452 | 2·54 | 2·02 | 1·61 | 1·56 | 1·75 |
| 1963 | 485 | 456 | 2·50 | 1·90 | 1·54 | 1·53 | 1·68 |
| 1964 | 482 | 456 | 2·51 | 1·93 | 1·58 | 1·49 | 1·68 |

மூலங்கள்: இலங்கை சுங்கப்புள்ளி விபரங்கள், கொழும்பு தேயிலைத் தரகர் சங்கம், தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிர்வாக அறிக்கைகள்.

1964ல் தேயிலை உற்பத்தி 4820 இலட்ச இருத்தல்களாக அமைந்திருந்தது. இது சென்ற ஆண்டு உச்சக் கட்ட உற்பத்தியான 4850 இலட்ச இருத்தல்கள் உற்பத்தியோடு ஒப்பிடும் போது, 30 இலட்ச இருத்தல்களை அல்லது ஒரு சதவீதத்தைக் கொண்ட சிறு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. எனினும், இந்த வீழ்ச்சி எவ்விதத்திலும் ஏற்றுமதிகளின் அளவைத்தாக்கவில்லை. அது 1963ம் ஆண்டின் மட்டத்தின்படி 4560 இலட்ச இருத்தல்களாக அமைந்திருந்தது.

கொழும்பு ஏலத்தில் பெறப்பட்ட எல்லாத் தராதரத் தேயிலையின் சராசரி விலை இருத்தல் ஒன்றிக்கு ரூபாய் 1/68 ஆக அல்லது சென்ற ஆண்டில் இருந்ததுடன் ஒத்து விளங்கியது. 1955 அடுத்து ஏற்பட்ட நிதானமான வீழ்ச்சியில் தற்காலிகமாக எனினும் ஏற்பட்ட ஒரு தடையை இது எடுத்துக்காட்டியது. எனினும் தனிப்பட்ட தராதரங்களின் விலைகளின் நடமாட்டத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் தென்பட்டன. உயர்ந்த பிரதேசத் தேயிலையின் சராசரி விலை இருத்தலுக்கு 3 சதத்தால் உயர்ந்து, இருத்தல் ரூ 1·93 சதமாகவும், மத்திய பிரதேசத் தேயிலையின் விலை இருத்தல் ரூ. 1·58 சதமாகவும் இருத்தலுக்கு 4 சதத்தால் உயர்ந்தது. ஆனல் கீழ்ப் பிரதேச தேயிலையின் சராசரி விலை 4 சதத்தால் வீழ்ச்சியடைந்து இருத்தல் ரூபா. 1·49 சதமாக அமைந்தது. இரண்டாம் கால் ஆண்டைத் தவிர்த்து அவ்வாண்டில் ஏனைய காலாண்டுகளை சென்ற ஆண்டில் தொடர்பான காலாண்டுகளுடன் ஒப்பிடுகையில், உயர்ந்த பிரதேசங்களில் தேயிலையின் சராசரி விலைகளில் ஏற்றம் தென்பட்டது. இவ்வேற்றம் இருத்தலுக்கு எட்டு சதமாக இறுதிக் காலாண்டில் அமைந்திருந்தது. இவ்வாண்டின் முதல் அரை ஆண்டுப் பிரிவின் போது மத்திய பிரதேசத் தேயிலையில் சென்ற ஆண்டின் தொடர்பான அரை ஆண்டுப் பிரிவோடு ஒப்பிடுகையில் விலை வீழ்ச்சியைக் காட்டியது. ஆனல் அவ்வாண்டின் இரண்டாம் பிரிவில் உரிய முறையில் நிலைமை திருந்தியது. அவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் இத்தேயிலையின் சராசரி விலைகள் இருத்தலுக்கு 22 சதமாக உயர்ந்தன. தாழ்ந்த பிரதேசத் தேயிலையின் விலையின் நடமாட்டம் பற்றியும் இத் தேயிலைக்கு பிரதான சந்தையில் ஏற்படும் நிலைமைகள்பற்றியும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். கீழ்பிரதேச தேயிலையின் சராசரி காலாண்டு விலைகளின் விபரத்தை சென்ற ஆண்டோடு ஒப்பிட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**1963–1964க்குரிய கொழும்பு ஏலத்தில் கீழ்ப்பிரதேச தேயிலையின் சராசரி விலைகள்**

| | ரூபா—இருத்தலுக்கு | |
|---|---|---|
| | 1963 | 1964 |
| 1ம் கால் .. .. .. | 1·60 | 1·61 |
| 2ம் கால் .. .. .. | 1·60 | 1·58 |
| 3ம் கால் .. .. .. | 1·44 | 1·38 |
| 4ம் கால் .. .. .. | 1·50 | 1·40 |

ஆண்டின் முதல் அரைப் பகுதியில் விலைகளில் சிறு வேறுபாடுதான் தென்பட்டது. ஆனல் ஆண்டின் 3ம், 4ம் காலாண்டுகளை சென்ற ஆண்டின் தொடர்பான காலாண்டுகளோடு ஒப்பிடுகையில் தேயிலையின் விலைகளில் கூரிய முறையில் முறையே 6 சதத்தாலும் 10 சதத்தாலும் வீழ்ச்சியேற்பட்டது. 8-8-64ல் இராக் தனது தேயிலை இறக்குமதி வர்த்தகத்தை தேசியமயமாக்கியதினுல் ஏற்பட்ட விளைவுகளே இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும். மத்திய கிழக்கு நாடுகளுள் மிகக் கூடிய அளவில் தேயிலையை எம்மிடம் இருந்து பெற்ற நாடு இராக்தான். இப் பிரதேசத்திற்குரிய எமது மொத்த ஏற்றுமதிகளுள் அரைவாசிக்கு மேற்பட்ட தொகையை இராக் தான் பெற்றுள்ளது. மேற்குறித்த திகதி தொடக்கம் இராக் அரசாங்கத்தின் "கொள்வனவுச் சபை" அந்நாட்டிற்கு தேயிலை இறக்குமதி செய்வது பற்றிய முழுப் பொறுப்பையும் ஏற்றது. இதனுல் கொழும்பு ஏலத்தில் இராக்கின் சார்பிலான கொள்வனவுகள் ஏறக்குறைய நின்றது. எனினும் மார்கழி 1964ன் முதற்பகுதியில் இது மிதமான அளவில் மீண்டும் தொடக்கப்பட்டது. இந்தக் காலக் கட்டத்தில் இராக் அரசாங்கத்தின் கொள்வனவு சபை தனியார் வர்த்தகத்தினை மாற்றி அமைத்து புதிய அமைப்பு முறைகளை உருவாக்கும் நிலையில் இருந்தது. இறுதிக் காலாண்டில் உள்நாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட சடுதியான இந்நிகழ்ச்சிகள் இராக்

குப் போக வேண்டிய தேயிலை ஓட்டத்தை பெரிதும் உருக்குலைத்தது. ஆவணி முதற் பகுதியில் இராக் தேயிலை இறக்குமதியை தேசிய மயமாக்கிய போது உள்ளூர் ஏற்றுமதியாளர்கள் தங்கள் களஞ்சியத்தில் இருந்த ஏறக்குறைய 55 தொட்டு 60 இலட்ச இறாத்தல் தேயிலையை இராக் வர்த்தகரோடு முன்னைய ஏற்பாட்டின்படி உடனடியாக அனுப்ப எண்ணியிருந்தார்கள். இந்த உடன்படிக்கைகளின் செல்லுபடிபற்றிய கேள்வியை ஒட்டி ஏற்படயிருந்த தீர்மானத்தினால் இத் தேயிலை ஏற்றுமதி செய்யபட முடியவில்லை. இவையும் இராக்கோடு எமக்குள்ள தேயிலை வர்த்தகத்தின் முழு எதிர்காலமுமே ஆண்டின் இறுதி மாதங்களிலே அரசாங்கத்தினதும் தனியார் வர்த்தகத்தினதும் முழுக் கவனத்தையும் கவர்ந்த விடயங்களாகும். இராக்குக் செய்யப்பட்ட தேயிலை ஏற்றுமதிகள் மாதாந்தம் சராசரி 47 இலட்சங்களாக முதல் ஒன்பது மாதங்களில்இருந்தது.

ஐப்பசியில் ஏழு இலட்சங்களாக வீழ்ச்சியுற்றன. அடுத்த மாதம் ஏறக்குறைய முற்றாக நின்றுவிட்டன. கொழும்பு ஏலத்தில் கீழ்ப்பிரதேச தேயிலைகளின் நிலைமைகளில் ஏற்பட்ட எதிர்விளைவுகள் கடுமையில் குறைந்தனவல்ல. அத்துடன் இராக் சந்தைக்குத் சிறப்பாக ஏற்ற நிலையிலுள்ள தேயிலைகளின் விலைகள் எடுத்துக் காட்காட்டாக பி. ஓ. பி. தேயிலைகள் இறுதிக் காலாண்டில் மிக கூர்மையாக வீழ்ச்சியுற்றன. இது மேலே குறிக்கப்பட்ட கீழ்ப் பிரதேச எல்லாத் தராதர தேயிலையின் சராசரி விலைகளிலும் பார்க்க குறைந்திருந்தது. கொழும்பு ஏலத்தில் இராக் மீண்டும் தோன்றியபின் மார்கழி 7ல் நடைபெற்ற விற்பனையில் மிதமான அளவில் தேயிலை வாங்கப்பட்டதோடு விலைகளிலும் படிப்படியான திருத்தங்களில் அடையாளங்கள் தென்பட்டன. எனினும் ஆண்டு முடிவில் இராக்குக்குக் செய்யப்பட்ட ஏற்றுமதிகளின் வழமையான ஓட்டம் மீண்டும் தொடங்கியதற்கு தெளிவான சான்று தென்படவில்லை.

சென்ற ஆண்டிலும் பார்க்க 1964ல் நடைபெற்ற இலண்டன் ஏலத்தில் எல்லாத் தேயிலையின் விலைகளும் பொதுவாக உயர்ந்திருந்தன. இவ்வகைத் தேயிலையின் எல்லாத் தரங்களின் சராசரி விலை இவ்வாண்டில் இறாத்தலுக்கு 4 சிலிங், 5·85 பென்ஸ்சாக அமைந்திருந்தது. இது சென்ற ஆண்டிலும் பார்க்க ஒரு இறாத்தலுக்கு 1·52 பென்ஸால் கூடியிருந்தது. தென் இந்தியத் தேயிலையின் சராசரி விலை சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில் இறாத்தலுக்கு 1·52 பென்ஸால் அதிகரித்திருந்தது. தென்னிந்தியத் தேயிலையின் சராசரி விலை இறாத்தலுக்கு 3 சிலிங் 9·87 பென்ஸ்சாக இருந்தது. மிகக் கூரிய முறையில் இறாத்தல் ஒன்றுக்கு 2·52 பென்ஸ்சாக கூடியுள்ளது. மறுபுறம் வட இந்தியத் தேயிலைகளின் சராசரி விலை இறாத்தலுக்கு 4 சிலிங் 6·62 பென்ஸ்சாக இருந்து, இறாத்தலுக்கு 1·08பென்ஸ்சாக வீழ்ச்சியுற்றது. இவ்வேலைகளில் விற்கப்பட்ட எல்லா வகைத் தேயிலையினதும் சராசரி விலை இறாத்தலுக்கு 4 சிலிங் 45 பென்ஸ்சாக இருந்தது. இது இறாத்தலுக்கு 0·80 பென்ஸ்சாக மிதமாக அதிகரித்துள்ளது.

அண்மை ஆண்டுகளில் தேயிலையின் மொத்த உலக நிரம்பலிலும் நுகர்விலும் ஏறக்குறைய ஒத்த நிலை நிலவிற்று. கிடைக்கத்தக்க மதிப்பீடுகள் 1963க்குரிய தேயிலையின் மொத்த உலக நிரம்பல் 1963ல் 16300 இலட்ச இறாத்தல்களாய் இருந்தது. ஆனால் உலகம் நுகர்ந்த தேயிலையின் மொத்தத் தொகை 16430 இலட்ச இறாத்தல்களாய் அமைந்திருந்தது.[2] இதனால் உலகின் நுகர்ச்சி நிரம்பல்களிலும் பார்க்க 130 இலட்ச இறாத்தலாய் அதிகரித்திருந்தது. 1964க்குரிய புள்ளி விபரங்கள் முழுதும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் தற்காலிகத் தரவு பெரும் உற்பத்தி நாடுகளின் அதிகரித்த உற்பத்தியையே எடுத்துக் காட்டுகிறது. இந்த உற்பத்தி 1963லும் பார்க்க

---

1. இலண்டன் தேயிலைத் தரகர் சங்கத்தின் தேயிலைச் சந்தை அறிக்கை எண் 653 நாள் 30. 12. 64.
2. சர்வதேசத் தேயிலைக் குழுவின் செய்தித் திரட்டு விபரங்கள். ஆனி 1964, துணை, மார்கழி 1964.

800 இலட்ச இருத்தலாய் கூடியிருந்தது. தேயிலை உற்பத்தியில் தென்னிந்தியாவில் 160 இலட்ச இருத்தல்களாலும் இலங்கை 30 இலட்ச இருத்தல்களாலும் வீழ்ச்சி யேற்பட்டதெனினும் வடகிழக்கு இந்தியாவில் ஏற்பட்ட கூரிய அதிகரித்த 680 இலட்ச இருத்தல் உற்பத்தியும், பாகிஸ்தான், இந்தோனேஷியா, ஆபிரிக்கா முதலிய நாடுகளில் ஏற்பட்ட குறைந்தளவு அதிகரிப்புகளும் மேற்கூறிய தேயிலை உற்பத்தியின் மேலதிகமாக ஈடுசெய்துள்ளன. முக்கியமாக தேயிலைகளை நுகரும் நாடாயும் திருப்பி ஏற்றுமதி செய்யும் நாடாய் உள்ள ஐக்கிய இராச்சியம் 1964ல் 5370 இலட்ச இருத்தல்களை இறக்குமதி செய்தன. இத் தொகை சென்ற ஆண்டிலும் பார்க்க 260 இலட்ச இருத்தலால் வீழ்ச்சியுற்றிருந்தது ஆண்டு இறுதியில் தேயிலையின் கையிருப்பு 1510 இலட்ச இருத்தல்களாய் இருந்தன. சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில் 180 இலட்ச இருத்தலால் வீழ்ச்சியுற்றிருந்தது.[5] எமக்குக் கிடைக்கத் தக்க சான்றுகள் 1964ல் நுகர்விலும் பார்க்க உலக நிரம்பல்கள் மிகுந்திருந்தமையே காட்டுவது போற் தெரிகிறது. எனினும் இதனின் அளவு அண்மை ஆண்டுகளில் நிரம்பலுக்கும் கேள்விக்கும் உள்ள அகன்ற சமநிலையைக் கெடுக்கும் அளவிற்கு அமைந்துள்ளதாகத் தென்படவில்லை.

எனினும் உற்பத்தியிலும், நுகர்விலும் ஏற்பட்ட நீண்ட காலப் போக்குகள் சிறிது கவலை தரத்தான் செய்கிறது. மரபு வழியாக தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளிலும் புதுக்க உற்பத்தி செய்யும் நாடுகளாகிய கிழக்கு ஆபிரிக்கா தென் அமெக்கா முதலிய நாடுகளிலும் செய்யப்படும் உற்பத்திக்கேற்ப உலக நுகர்வு கூடினால் அன்றி, தேயிலையின் நிலை, குறிப்பாக நடுத்தர வெறும் தேயிலையின் நிலை, நம்பிக்கையூட்டுவதாக அமைய முடியாது.

## இரப்பர்

அட்டவணை II (ஆ) 4 இரப்பரது உற்பத்தியும் ஏற்றுமதிகளும், விலைகளும் பற்றிய தரவுகளைத் தருகின்றது.

அட்டவணை II ஆ—4

### இரப்பர்-உற்பத்தியும், ஏற்றுமதிகளும், விலைகளும்

| வருடம் | உற்பத்தி பத்து இலட்சம் இருத்தல்கள் | ஏற்றுமதி பத்து இலட்சம் இருத்தல்கள் | க. ஏ. பெ. விலை இருத்தலுக்கு ரூ. சதம் | கொழும்புச் சந்தை விலை ஆர். எஸ். எஸ். 1ம் ரகம் இருத்தலுக்கு ரூ. சதம் |
|---|---|---|---|---|
| 1955 | 210 | 222 | 1·58 | 1·28 |
| 1956 | 214 | 193 | 1·52 | 1·45 |
| 1957 | 220 | 209 | 1·44 | 1·16 |
| 1958 | 224 | 207 | 1·25 | 0·93 |
| 1959 | 205 | 206 | 1·45 | 1·25 |
| 1960 | 218 | 235 | 1·61 | 1·24 |
| 1961 | 215 | 197 | 1·32 | 1·01 |
| 1962 | 229 | 224 | 1·29 | 0·98 |
| 1963 | 231 | 209 | 1·23 | 0·93 |
| 1964 | 246 | 253 | 1·15 | 0·90 |

மூலங்கள்: இரப்பர் கட்டுப்பாட்டதிகாரியின் நிர்வாக அறிக்கைகள், இலங்கை சுங்கப்புள்ளி விபரங்கள், கொழும்பு இரப்பர் தரகர் சங்கம.

3. முதலீடு செய்வோரின் கார்டியன்—தேயிலை, இரப்பர், அஞ்சல் 1965-2-1, பக்கம் 27.
4. இலண்டன் தேயிலைத் தரகர் சங்கத்தின் தேயிலைச் சந்தை அறிக்கை எண் 658, 65-2-5.
5. இலண்டன் தேயிலைத் தரகர் சங்கத்தின் தேயிலைச் சந்தை அறிக்கை எண். 654—65-1-8.

1963-ம் ஆண்டில், ஆக 20 இலட்சம் இறுத்தல்கள் கொண்ட மிதமான அதிகரிப்பை மட்டுமே கொண்டிருந்த இரப்பர் உற்பத்தியானது, இவ்வருடத்தின்போது கூர்மையாக விரிவடைந்தது. இது இவ்வாண்டில் 2460 இலட்சம் இறுத்தல்களாக அமைந்து கடந்த வருடத்து உற்பத்தி மட்டத்தைவிட 150 இலட்சம் இறுத்தல்களால் அல்லது 7 சத வீதத்தினுல் அதிகரித்துள்ளது. தற்போது உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும், புனர்நடுகை செய்யப்பட்ட பிரதேசங்களிலிருந்து வரும் அதிகரித்த உற்பத்தி விளைவுகளும், அத்துடன் அனுகூலமான வானிலையும் இணைந்து, இவ்வுற்பத்தி அதிகரிப்பை உண்டாக்கின. ஏற்றுமதிகளின் அளவு மிக விரைவாக விரிவடைந்துள்ளது. இது இவ்வாண்டில் 2530 இலட்சம் இறுத்தல்களாக அமைந்து 1963-ம் ஆண்டிலிருந்த ஏற்றுமதிகளின் அளவினைவிட 440 இலட்சம் இறுத்தல்களால் அல்லது 21 சதவீதத்தால் உயர்ந்துள்ளது. கொழும்புச் சந்தையிலே, ஆர். எஸ். எஸ். ரகம் 1 இரப்பரின் சராசரி விலை இறுத்தலுக்கு 90 சதங்களாக அமைந்துள்ளது. கடந்த ஆண்டிற்கான சராசரி விலையுடன் ஒப்பிடுகையில் இது இறுத்தலுக்கு 3 சதங்களைக் கொண்ட ஒரு வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்றது.

இயற்கை இரப்பருக்கான சர்வதேசச் சந்தையானது, 1964-ம் ஆண்டின்போது பெரும்பாலும் வீழ்ச்சியான அல்லது மந்தமான போக்கினைக் கொண்டிருந்தது. இத்துடன் தென்கிழக்கு ஆசியாவின் அரசியற் குழப்பம், அல்லது பிரதான சந்தைகளிலே உருசியாவினது இரப்பர்க் கொள்வனவுகளின் மாற்றங்கள் ஆகியன விலைகளிலே தனது பிரதிபலன்களை ஓரளவு கொண்டுவர எத்தனிக்கும் குறிப்பிட்ட சில சம்பவங்களும், காணப்பட்டன. இவ்வாண்டின் போதுள்ள விலைகள், குறுகிய கால எல்லைக்குள்ளே ஏற்றவிறக்கப் போக்குகளைக் கொண்டு காணப்பட்ட பொழுதிலும், அவை நீண்ட காலத் தவணைக்கான வீழ்ச்சிப் போக்கினைத் தொடர்ந்தும் பிரதிபலித்தன. உண்மையில் பாதகமான நீண்டகாலப் போக்கைப் பின்னணியிற் கொண்ட குறுகிய கால விலையினது ஏற்றவிறக்கங்களின் குன்றிய தன்மை, சர்வதேசச் சந்தையிலே கலப்பு இரப்பரின் உற்பத்தி ஒரு தீர்க்கமான செல்வாக்கைக் கொண்டு வந்ததிலிருந்து, ஒரு சிறப்பியல்பாக அமைந்திருந்தது. 1964-ம் ஆண்டின் முதற் பதினொரு மாதங்களின் போதும் கூர்மையான வீழ்ச்சியடைந்த உருசியாவினது இரப்பர் இறக்குமதிக் கொள்வனவுகளே, இரப்பரின் விலைகளின் மீது இறக்கமான விளைவுகளைக் கொண்டு வந்த வேறொரு காரணியாகும். இவை, 1963-ம் ஆண்டின் இதே காலப் பகுதிக்குள் இருந்த 287,500 தொன்களுடன் ஒப்பிடுகையில், 1964-ம் ஆண்டின் முதற் பதினொரு மாதங்களின் போது, 137,000 தொன்களுக்கு[1] மேற்படாதிருந்தன. இலண்டன், சந்தையிலே, இவ்வாண்டிற்கான ஆர். எஸ். எஸ். 1ம் ரகம் இரப்பரின் உடனடி விலை, சராசரியாக இறுத்தலுக்கு 1 சி. 8 5/12 பெ. ஆக இருந்தது. 1963-ம் ஆண்டிற்குரிய விலையுடன் ஒப்பிடுகையில், இது இறுத்தலுக்கு 1 1/3 பெ. கொண்ட வீழ்ச்சியைக் கொண்டுள்ளது. 1963-ம் ஆண்டினது விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஒரு சிறிதளவு உயர்ந்து காணப்பட்டது. இவ்வீழ்ச்சி இறுத்தலுக்கு 1 9/16 பெ. களாகும். சிங்கப்பூர்ச் சந்தையிலே, இந்த ரகத்திற்கான சராசரி விலையானது, இறுத்தலுக்கு 68.17 ஸ்ரெயிற்ஸ் சதங்களாக இருந்தது. இது 1963-ம் ஆண்டின் விலையிலும் பார்க்க இறுத்தலுக்கு 4·25 ஸ்ரெயிற்ஸ் சதங்களான வீழ்ச்சியைக் கொண்டுள்ளது. 1963-ம் ஆண்டின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி, இலண்டன் சந்தையிலுள்ளதைப் போலவே ஓரளவு பெரிதாக இருந்தது. அதாவது இறுத்தலுக்கு 5·78 ஸ்ரெயிற்ஸ் சதங்களாகும்.

---

1. வேறு விதமாகக் குறிப்பிடாத விடத்து, அறிக்கையின் இப்பகுதியிலேயுள்ள தொன்கள், நீண்ட தொன்களையே குறிப்பனவாகும்.

2. இரப்பர் புள்ளி விபரச் சஞ்சிகை (சர்வதேச இரப்பர் ஆய்வுக் குழுவிற்குரியது) மார்கழி 1964 பக்கம்-7.

சர்வதேச இரப்பர் ஆய்வுக் குழுவின் கடைசியாகக் கிடைத்த மதிப்பீடுகளின் படி, இயற்கை இரப்பரின் உலக உற்பத்தி, 1964-ம் ஆண்டின் போது 2,205,000 தொன்களாக இருந்து, கடந்த ஆண்டிலும் பார்க்க 150,000 தொன்களை அல்லது 7 சத வீதத்தைக் கொண்ட ஒரு அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது. கலப்பு இரப்ப ரின் உலக உற்பத்தி 2,755,000 தொன்களாக இருந்து, இரட்டிப்பு மடங்கு வேகத் துடன் 315,000 தொன்களால் அல்லது 13 சத வீதத்தால் விரிவடைந்துள்ளது. இம் மதிப்பீடுகள் இவ்வாண்டின் போதுள்ள இயற்கை இரப்பரினது (கையிருப்பு விநி யோகங்களை உள்ளடக்கியவை) நுகர்ச்சியை விட 80,000 தொன்களைக் கொண்ட நிரம்பலின் மிதமான மிகையைக் காட்டுகின்றன. இம்மிகை, கடந்த ஆண்டிற்கான 72,500 தொன்கள் கொண்ட குறையுடன் ஒப்பிடற்குரியது. கலப்பு இரப்பரைப் பொறுத்த மட்டில் நுகர்ச்சியிலும் பார்க்க நிரம்பலின் மிகை மிகவும் பெரிதாக உள்ளது. இது, கடந்த ஆண்டிற்குரிய மட்டத்தைவிட, 15,000 தொன்களால் அதி கரித்து, 115,000 தொன்களாக விளங்கியது. மேலும் சகல இரப்பரினதும் உலக நுகர்ச்சியிலே ஏற்பட்ட 310,000 தொன்களைக் கொண்ட அதிகரிப்பில் கலப்பு இரப்ப ரானது 300,000 தொன்களுக்கு அல்லது 97 சத வீதத்திற்கு வகை கூறியுள்ளது.

முன்பு இயற்கை இரப்பர் மட்டுமே உபயோகப்படுத்தப்பட்ட பாவிப்புகளுள் ளும் கலப்பு இரப்பரின் பாவிப்பு நிதானமாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. 1964-ம் ஆண்டில் புதிய உயர்ந்த ரக கலப்பு இரப்பர்களின் தன்மையிலே மேலும் திருத்தங் கள் மட்டுமன்றி, அவற்றின் உற்பத்தியில் அதிகரிப்பும் விலைகளிற் குறைவும் காணப் பட்டன. அநேக கைத்தொழில் முன்னேற்றமடைந்த நாடுகளிலே (அத்துடன் முன் னேற்றமடைந்து வரும் நாடுகளிலும் கூட) ஓரளவு அவற்றின் நில எரி எண்ணெய்- இரசாயன நிறுவனங்களுக்குத் துணையாக கலப்பு இரப்பரின் உற்பத்தி புதிய ஆற்றல் தொடர்ந்து நிலையாக்கப்பட்டுள்ளது. இதைவிட இப்புதிய கலப்பு இரப்பர்களை உற் பத்தி செய்யும், ஏற்கனவே நிறுவப்பட்டிருக்கும் இயந்திரங்களில் கணிசமான அளவு மிகையானஉற்பத்தி ஆற்றலிருப்பதற்கான சான்றுள்ளது போல் தென்படுகின்றது. இக்கலப்பு இரப்பர்களுக்கான சந்தைகள், முழுமையாகப் பயன்படுவதற்கு, இன்ன மும் தயாராக உள்ளன. மேலும் அண்மை ஆண்டுகளில் உருசியாவின் இயற்கைஇரப் பர் இறக்குமதிகளில்[2] ஒரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது, உருசியாவிலேயும் கலப்பு இரப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பினை எடுத்துக் காட்டுகின்றது. இந்நிகழ்ச் சிகள் யாவும், எதிர்வரும் ஆண்டுகளில் இயற்கை இரப்பரின் விலையில் ஒரு வீழ்ச்சிப் போக்கான அமுக்கத்தைக் கொண்டு வரக்கூடும்.

---

1. சர்வதேச இரப்பர் சாரத் தொகுதி, மார்கழி 1964, பக்கம்—76.

2. உருசியாவின் இரப்பர் இறக்குமதிகள் பின்வருமாறு வீழ்ச்சியுற்றன:

| | | | |
|---|---|---|---|
| 1961 | — | 363,750 | தொன்கள். |
| 1962 | — | 345,500 | ,, |
| 1963 | — | 292,750 | ,, |
| 1964 | — | 137,000 | ,, (11 மாதங்கள்) |

மூலம்: இரப்பர் புள்ளிவிபரச் சஞ்சிகை (ச,இ.ஆ.கு). மார்கழி 1964, பக்கம்—7.

## தெங்குப் பொருட்கள்

அட்டவணை II (ஆ) 5 பிரதான தெங்குப் பொருட்கள் மூன்றினது ஏற்றுமதிகளும், விலைகளும் பற்றிய தரவுகளைக் கொடுக்கின்றது.

அட்டவணை II ஆ—5

### பிரதான தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி அளவுகளும் விலைகளும்

| வருடம் | அளவு | | | | க ஏ. பெ. விலை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தேங்காய் எண்ணெய் ஆயிரம் அந்தர் | கொப்பரா ஆயிரம் அந்தர் | தேங்காய்த் துருவல் ஆயிரம் அந்தர் | மொத்தம் (சமமான தேங்காய்களின் கணக்கின்படி) 10இலட்சம் காய்கள் | தேங்காய் எண்ணெய் தொன்னுக்கு ரூ. ச. | கொப்பரா கண்டிக்கு* ரூ. ச. | தேங்காய்த் துருவல் இருத்தலுக்கு ரூ. ச. |
| 1955 .. | 1,945 | 1,367 | 1,157 | 1,531 | 1,156·20 | 209·50 | 0·42 |
| 1956 .. | 1,698 | 1,155 | 1,275 | 1,418 | 1,618·40 | 212·15 | 0·45 |
| 1957 .. | 1,081 | 695 | 978 | 950 | 1,256·00 | 239·75 | 0·50 |
| 1958 .. | 887 | 554 | 1,135 | 890 | 1,396·00 | 264·85 | 0·57 |
| 1959 .. | 1,389 | 852 | 1,050 | 1,140 | 1,688·20 | 302·60 | 0·64 |
| 1960 .. | 1,110 | 583 | 1,099 | 976 | 1,436·60 | 276·15 | 0·58 |
| 1961 .. | 1,837 | 1,100 | 967 | 1,355 | 1,163·20 | 217·35 | 0·44 |
| 1962 .. | 2,043 | 1,448 | 981 | 1,530 | 1,101·60 | 203·70 | 0·51 |
| 1963 .. | 1,621 | 862 | 967 | 1,208 | 1,220·80 | 227·75 | 0·55 |
| 1964 .. | 2,351 | 1,162 | 1,080 | 1,618 | 1,308·40 | 237·20 | 0·53 |

மூலம்: இலங்கை சுங்கப்புள்ளி விபரங்கள்

*1 "கண்டி" = 5 அந்தர்.

1963-ம் ஆண்டில், பிரதான தெங்குப் பொருட்கள் மூன்றினதும், மொத்த ஏற்றுமதி அளவு, 21 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இது பெரும்பாலும், பாதகமான வானிலையினுற் பாதிக்கப்பட்ட தெங்கு உற்பத்தியிலே ஒரு வீழ்ச்சியுண்டானதன் காரணமாக, ஏற்பட்டது. 1964-ம் ஆண்டின்போது தெங்கு உற்பத்தியிலே ஒரு அபிவிருத்தி காணப்பட்டது. இத் தெங்கு உற்பத்திப் பொருட்களினது மொத்த ஏற்றுமதிகளின் அளவு, 16180 இலட்சம் காய்களாக கடந்த ஆண்டிலிருந்திலும் பார்க்க 34 சத வீதத்தைக் கொண்ட ஒரு தீட்சணமான விரிவைக் காட்டியது. தேங்காயெண்ணெ ஏற்றுமதிகளின் அளவு 45 சத வீதத்தால் விரிவடைந்திருக்கும் பொழுது, கொப்பராவினதும், தேங்காய்த் துருவலினதும் ஏற்றுமதி அளவுகள், முறையே, 35 சதவீதத்தாலும் 12 சதவீதத்தாலும், குறைவான வேகத்துடன் விரிவடைந்துள்ளன.

1963-ம் ஆண்டின்போது தேங்காயெண்ணெயினதும் கொப்பராவினதும் சராசரி ஏற்றுமதி விலைகள், முறையே, 11 சதவீதத்தாலும், 12 சதவீதத்தாலும் உயர்வடைந்துள்ளன. 1964-ம் ஆண்டின்போது வேகக் குறைவாகவெனினும், இவ்விலைகள் உயர்வடைந்தன. இவ்வாண்டில் தேங்காயெண்ணெயில் விலை 7 சதவீதத்தாலும் கொப்பராவின் விலை 4 சத வீதத்தாலும் அதிகரித்துள்ளன. எனினும், தேங்காய்த் துருவலைப் பொறுத்த மட்டில், 1963-ம் ஆண்டில் 8 சத வீதத்தினுல் உயர்வடைந்திருந்த சராசரி கப்பலில் ஏற்றப்பட்டுள்ள வரையான ஏற்றுமதி விலையானது, இவ்வாண்டில் 4 சதவீதத்தைக் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. இம்மாற்றங்கள், பொதுப்படையான நியதிகளின்படி, இப்பொருட்களுக்குக் கொழும்புச் சந்தையிலே நிலவும் போக்குகளைப் பிரதிபலித்தன. கொழும்புச் சந்தையிலே தேங்காயெண்ணெயின் விலைகள் வருட முழுமையிலும் நிதானமாகச் சீர்திருந்தியுள்ளன. இவ்வாண்டின் ஒவ்வொரு காற் பகுதியிலும், இதன் சராசரி விலைகள், கடந்த வருடத்துத்

தொடர்பான காற்பகுதியில் இருந்தவற்றிலிருந்து தெளிவான முறையில் உயர்வடைந்துள்ளன. 1964-ம் ஆண்டிற்கான சராசரி விலை, தொன்னுக்கு ரூபா 1087·69 சதங்களாக இருந்தது. இது, கடந்த வருடத்திலோடு ஒப்பிடுகையில் ரூபா 58·95 சதங்களால் அல்லது 6 சதவீதத்திலான அதிகரிப்பைக் கொண்டதாகும். எனினும், கொப்பராவினது விலைகள், பொதுவாகத் தேங்காயெண்ணெயின் விலைகளுடன் ஒட்டியே செல்லும்போது, சற்றே நிலைபேறற்ற தன்மையைக் காட்டின. இவ்விலைகள், 1964-ம் ஆண்டின் முதல் அரையாண்டுப் பிரிவின்போது 1963-ம் ஆண்டின் அதே காலப் பிரிவில் இருந்தவற்றை விடக் குறிப்பிடத் தக்களவு குறைவாக இருக்கையில் 1964-ம் ஆண்டின் இறுதி அரையாண்டின் போது, 1963-ம் ஆண்டின் இறுதி அரையாண்டிலிருந்தவற்றை விடத் தெளிவான முறையிலே உயர்ந்துள்ளன. இவ்வருடத்திற்கான கொப்பராவின் சராசரி விலை, ''கண்டிக்கு'' ரூபா 167·78 சதங்களாக இருந்து, கடந்த ஆண்டிற்குரிய மட்டத்தைவிட சிறிதளவு மாற்றத்தையே காட்டியுள்ளது. தேங்காய்த் துருவலின் சராசரி விலை, இறுத்தலுக்கு 40 சதங்களாக இருந்து, கடந்த ஆண்டிலிருந்ததுடன் ஒப்பிடுகையில், இறுத்தலுக்கு 4 சதங்களால் அல்லது 9 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது. இலண்டன் சந்தையிலே, இலங்கைத் தேங்காயெண்ணெயினது சராசரி கொ. கா. க. விலை, தொன்னுக்கு 107½ பவுண்களாக அமைந்தது. இது, 1963-ம் ஆண்டிற்குரிய விலையிலும் பார்க்கத் தொன்னுக்கு 5 பவுண்களை அல்லது 5 சத வீதத்தைக் கொண்ட அதிகரிப்பைக்கொண்டுள்ளது.

சர்வதேச சந்தையிலே உட்கொள்ளத்தக்க எண்ணெய் வகைகள் செழிப்புடன் ஏற்றமடைந்து விளங்கிய ஓர் ஆண்டாக, 1964-ம் ஆண்டு அமைந்துள்ளது. மென்மைத் தன்மை வாய்ந்த எண்ணெகளால் (பிரதானமாகக் கடலை எண்ணெயும், சோயா அவரை எண்ணெயும்) மிகப் பெருமளவு இலாபங்கள் அடையப்பட்டிருக்கையில், தேங்காய் எண்ணெ உட்பட்ட ''லோரிக்'' எண்ணெகளும், கிடைத்தற்குரிய நிரம்பல்களிலும் பார்க்க இவ்வெண்ணெகளுக்கு அதிகரித்த கேள்வியுள்ளதன் காரணத்தால், நன்மையடைந்துள்ளன. மீன் எண்ணெ வகைகளில் தட்டுப்பாடும், மத்தியதரைப் பிரதேசத்தின் ''ஒலிவ்'' தாவர உற்பத்தியில் 1964/65ம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட வீழ்ச்சியும், இந்தியாவின் கடலை எண்ணெ ஏற்றுமதிகளில் ஆடி 11, 1964 லிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட தற்காலிகமான ஒத்திவைப்பும், இவ்வெண்ணெ வகைகளின் விலைகளைப் பலப்படுத்தத் துணை செய்த முக்கிய காரணிகளுள் சிலவாக அமைந்தன.

## இறக்குமதிகள்:

அட்டவணை II (ஆ) 6, தேர்ந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகளைப், பிரதான தொகுதிகளின்படியும், பண்டங்களின்படியும், அல்லது பண்டத் தொகுதிகளின்படியும், சுங்கப் புள்ளி விபரங்களிற் பிரதிபலிக்கப்பட்டுள்ளபடி தருகின்றது.

1964-ம் ஆண்டின்போது 4850 இலட்சம் ரூபாய்களால் [1] அல்லது 33 சத வீதத்தால் தீட்சணமான அதிகரித்த இறக்குமதிகளின் பெறுமானம், இறக்குமதிகளில் 1700 இலட்சம் ரூபாய்களை அல்லது 10 சத வீதத்தைக் கொண்ட கணிசமான வீழ்ச்சியுடன் கூடிய கடந்த ஆண்டின் அனுபவத்திற்கு, முரணாக உள்ளது. இறக்குமதிகளில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பு, ''நுகர்வுப் பொருட்கள்'' இறக்குமதிகளிலேயே செறிந்து காணப்பட்டது. இந் ''நுகர்வுப் பொருட்களி''ன் இறக்குமதிகள், 1963-ம் ஆண்டிலிருந்தவற்றுடன் ஒப்பிடுகையில், இவ்வருடத்தின் போது, 4820 இலட்சம் ரூபாய்களால் அல்லது 62 சத வீதத்தால் அதிகரித்துள்ளன. மொத்த இறக்குமதிகளுள் நுகர்வுப் பொருட்களின் பங்கு, கடந்த மூன்று ஆண்டுகளுக்குரிய சராசரியாகிய 55 சதவீதத்திலிருந்து, இவ்வாண்டில் 64 சத வீதத்திற்குத் தீட்சணமாக உயர்வடைந்துள்ளது. ''நடுத்தரமான பொருட்களில்'' இறக்குமதிகள், 250 இலட்சம் ரூபாய்களால் அல்லது 7 சதவீதத்தால் மிதமாக அதிகரித்துள்ளன. ஆனால், மொத்த இறக்குமதிகளிலே இவற்றின் பங்கு, 20 சத வீதமாக கடந்த ஆண்டிலிருந்ததிலும் பார்க்க 5 சதவீதப் புள்ளிகளான வீழ்ச்சியைக் காட்டுகின்றது. மறுபுறத்தில், ''முதலீட்டப் பொருட்களின்'' இறக்குமதிகள், 190 இலட்சம் ரூபாய்களால் அல்லது 6 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றிருக்கையில், மொத்த இறக்குமதிகளிலே இவற்றின் பங்கானது, அண்மை ஆண்டுகளிலே மிகக் குறைந்த வீதமாகிய 15 சதவீதமாக இருந்தது. இது, சென்ற ஆண்டிலிருந்ததிலும் பார்க்க கணிசமான அளவு குறைவானதாக, அதாவது 22 சத வீதத்தளவில், அமைந்தது.

---

[1] பக்கம் 53ல் உள்ள அடிக்குறிப்பைக் கவனிக்கவும்

அட்டவணை II ஆ—6

# பிரதான தொகுதிகளின்படியும், பண்டங்களின்படியும் அல்லது பண்டத் தொகுதிகளின்படியுமான இறக்குமதிகள் 1959 — 64

| | பெறுமானம் பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | | மொத்த இறக்குமதிகளின் சதவீதமாக | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 |
| **1. நுகர்ச்சிப் பொருட்கள்** | **1,203** | **1,195** | **972** | **906** | **781** | **1,263** | **60·0** | **61·0** | **57·1** | **54·6** | **52·4** | **63·9** |
| (அ) உணவும் குடிவகைகளும் | 800 | 752 | 672 | 630 | 629 | 1,008 | 39·9 | 38·4 | 39·5 | 38·0 | 42·2 | 51·0 |
| (i) அரிசி | 283 | 242 | 217 | 195 | 192 | 326 | 14·1 | 12.3 | 12·7 | 11·7 | 12·9 | 16·5 |
| (ii) கோதுமை மா | 106 | 65 | 69 | 71 | 60 | 137 | 5·3 | 3·3 | 4·1 | 4·3 | 4·0 | 6·9 |
| (iii) (அ) தூய்மையாக்கப்பட்ட சீனி | 59 | 65 | 77 | 56 | 70 | 185 | 2·9 | 3·3 | 4·5 | 3·4 | 4·7 | 9·4 |
| (ஆ) ஏனைய சீனி வகை (சர்க்கரை, பணங்கட்டி கற்கண்டு) | 16 | 14 | 1 | 2 | 3 | 2 | 0·8 | 0·7 | 0·1 | 0·1 | 0·2 | 0·1 |
| (iv) பாலும் பாற் பொருட்களும் | 78 | 72 | 66 | 76 | 77 | 94 | 3·9 | 3·7 | 3·9 | 4·6 | 5·2 | 4·8 |
| (v) இறைச்சி, மீன், முட்டைகள் | 99 | 115 | 77 | 62 | 65 | 74 | 4·9 | 5·9 | 4·5 | 3·7 | 4·4 | 3·7 |
| (vi) கடலை, பருப்பு, கறிச்சரக்குகள் | 94 | 113 | 113 | 117 | 112 | 139 | 4·7 | 5·8 | 6·6 | 7·0 | 7·5 | 7·0 |
| (vii) குடிவகைகளும், தயாரிக்கப்பட்ட புகையிலையும் | 15 | 14 | 10 | 5 | 5 | 3 | 0·7 | 0·7 | 0·6 | 0·3 | 0·3 | 0·2 |
| (ஆ) ஆடை வகைகள் (உடைகள் உட்பட) | 179 | 196 | 172 | 149 | 83 | 165 | 8·9 | 10·0 | 10·1 | 9·0 | 5·6 | 8·4 |
| (இ) ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள் | 224 | 247 | 128 | 127 | 69 | 90 | 11·2 | 12·6 | 7·5 | 7·7 | 4·6 | 4·6 |
| (i) மோட்டோர் கார்கள் | 50 | 53 | 8 | 2 | 2 | 3 | 2·5 | 2·7 | 0·5 | 0·1 | 0·1 | 0·2 |
| (ii) கடிகாரங்களும், மணிக்கூடுகளும் | 19 | 31 | 3 | 2 | ... | ... | 0·9 | 1·6 | 0·2 | 0·1 | ... | ... |
| (iii) வானொலிப் பெட்டிகள் | 10 | 12 | 3 | 1 | ... | ... | 0·5 | 0·6 | 0·2 | 0·1 | ... | ... |
| (iv) இரப்பர் ரயர்களும், ரியூப்களும் | 9 | 9 | 7 | 8 | 5 | 4 | 0·4 | 0·5 | 0·4 | 0·5 | 0·3 | 0·2 |
| (v) மருந்துகளும் மருந்துப் பொருட்களும் | 32 | 32 | 27 | 25 | 20 | 26 | 1·6 | 1·6 | 1·6 | 1·5 | 1·3 | 1·3 |
| **2. நடுத்தரமான பொருட்கள்** | **396** | **397** | **383** | **409** | **372** | **397** | **19·8** | **20·3** | **22·5** | **24·6** | **25·0** | **20·1** |
| (i) உரம் | 61 | 58 | 57 | 60 | 68 | 78 | 3·0 | 3·0 | 3·3 | 3·6 | 4·6 | 3·9 |
| (ii) நில எரி எண்ணெய்ப் பொருட்கள் | 135 | 124 | 127 | 126 | 119 | 93 | 6·7 | 6·3 | 7·5 | 7·6 | 8·0 | 4·7 |
| (iii) நிலக்கரி | 11 | 17 | 9 | 9 | 9 | 12 | 0·5 | 0·9 | 0·5 | 0·5 | 0·6 | 0·6 |
| (iv) இரசாயனப் பொருட்கள் | 26 | 28 | 27 | 33 | 32 | 37 | 1·3 | 1·4 | 1·6 | 2·0 | 2·1 | 1·9 |
| (v) சாயப் பொருட்களும், வர்ணப் பொருட்களும் | 13 | 12 | 11 | 15 | 10 | 12 | 0·6 | 0·6 | 0·6 | 0·9 | 0·7 | 0·6 |
| (vi) தேயிலையும் ஏனைய பெட்டிகளும் | 13 | 13 | 14 | 16 | 15 | 15 | 0·6 | 0·7 | 0·8 | 1·0 | 1·0 | 0·8 |
| (vii) காகிதமும், காகித மட்டையும் | 31 | 35 | 32 | 32 | 27 | 35 | 1·5 | 1·8 | 1·9 | 1·9 | 1·8 | 1·8 |
| (viii) நெசவு நூலும், தையல் நூலும் | 21 | 25 | 23 | 22 | 13 | 22 | 1·0 | 1·3 | 1·4 | 1·3 | 0·9 | 1·1 |
| (ix) தயாரிக்கப்படாத புகையிலை | 11 | 11 | 12 | 10 | 9 | 7 | 0·5 | 0·6 | 0·7 | 0·6 | 0·6 | 0·4 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **389** | **355** | **339** | **337** | **324** | **305** | **19·4** | **18·1** | **19·9** | **20·3** | **21·7** | **15·4** |
| (i) கட்டட ஆக்கப் பொருட்கள் | 88 | 100 | 89 | 100 | 77 | 93 | 4·4 | 5·1 | 5·2 | 6·0 | 5·2 | 4·7 |
| (ii) போக்குவரத்து சாதனங்கள் | 146 | 118 | 100 | 92 | 100 | 58 | 7·3 | 6·0 | 5·9 | 5·5 | 6·7 | 2·9 |
| (iii) இயந்திரங்களும் உபகரணங்களும் | 134 | 119 | 138 | 133 | 138 | 145 | 6·7 | 6·1 | 8·1 | 8·0 | 9·3 | 7·3 |
| **4. மேலுள்ள விடயங்களின் மொத்தம் (விடயங்கள் 1 + 2 + 3)** | **1,988** | **1,947** | **1,694** | **1,652** | **1,477** | **1,965** | **99·2** | **99·3** | **99·5** | **99·5** | **99·1** | **99·5** |
| **5, பகுக்கப்படாத இறக்குமதிகள்** | **17** | **13** | **9** | **8** | **13** | **10** | **0·8** | **0·7** | **0·5** | **0·5** | **0·9** | **0·5** |
| **6. சகல இறக்குமதிகளினதும் மொத்தம்** | **2,005** | **1,960** | **1,703** | **1,660** | **1,490** | **1,975** | **100·0** | **100·0** | **100·0** | **100·0** | **100·0** | **100·0** |

மூலம்: இலங்கை சுங்கப்புள்ளி விபரங்கள்.

குறிப்பு: இவற்றின் படுகையைத் திருத்துமுகமாக, மேற்கொடுக்கப்பட்ட அட்டவணையிலுள்ள 1954ம் ஆண்டு துவக்கம் 1963ம் ஆண்டு வரையிலுமான விடயங்களில் அதிகமானவற்றின் தரவுகள் (முன்னைய ஆண்டறிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளன.) இம்முறை குறிப்பிடத்தக்களவில் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

''நுகர்வுப் பொருட்கள்'' பகுப்பிலே ''உணவும், குடிவகையும்'' என்ற விடயத்தின் இறக்குமதிகள், 3790 இலட்சம் ரூபாய்களால் அல்லது 60 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. அரிசி, கோதுமை மா, சீனி ஆகிய அரசாங்க இறக்குமதிகள் மட்டும், இம் மொத்த அதிகரிப்பில் 3260 இலட்சம் ரூபாய்க்ள் கொண்ட அதிகரிப்பிற்கு வகை கூறின. மொத்த இறக்குமதிகளில் ''உணவும் குடிவகையும்'' என்ற விடயத்தினது இறக்குமதிகளின் பங்கு கடந்த ஐந்து ஆண்டுகளிலிருந்து சராசரிப் பங்காகிய 40 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில், 51 சதவீதமாக விளங்கியது. ''கடலை, பருப்பு, வகைகள், கறிவகைகள்'' என்ற விடயத்தின் இறக்குமதிகள், 270 இலட்சம் ரூபாய்களால் அல்லது 24 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், ''பாலும் பாற்பொருட்களும்'' என்ற விடயத்தின் இறக்குமதிகள், 170 இலட்சம் ரூபாய்களால் அல்லது 21 சத வீதத்தால் அதிகரித்துள்ளன.

அரிசி, கோதுமை மா, சீனி ஆகியவற்றின் இறக்குமதிகளைப் பற்றி மேலும் சிறப்பாகக் குறிப்பிடுதல், தகுந்த தொன்றும். ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டிருப்பதற்கேற்ப, எவ்வருடத்திலும், இப்பண்டங்களின் சுங்கப் பதிவேடுகளிற் பதியப்பட்ட இறக்குமதிகளுக்கும், உணவு ஆணையாளரால் உண்மையிற் பெறப்பட்ட இறக்குமதிகளுக்கும் கணிசமான அளவு வேறுபாடு இருக்கக்கூடும். கீழ்க்காணும், தரவுகள், 1963, 1964 ஆகிய ஆண்டுகளிற்குரிய இவ்வேறுபாட்டை விளக்குகின்றன.

| | | | |
|---|---|---|---|
| அளவு | ... | (அ) = | ஆயிரம் தொன்கள் |
| பெறுமானம் | ... | (பெ) = | பத்து இலட்சம் ரூபாய்கள் |
| அலகொன்றின் சராசரி விலை | . | கொ.க (வி)= | தொன்னுக்கு ரூபாய்கள். |

| | உணவு ஆணையாளரின் தரவுகள் | | | | சுங்கத் தரவுகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1963 | 1964 | மாற்றம் | | 1963 | 1964 | மாற்றம் | |
| | | | முழுமையும் | % | | | முழுமையும் | % |
| அரிசி — (அ) | 510 | 547 | + 37 | + 7·3 | 397 | 648 | +251 | + 63·2 |
| (பெ) | 250 | 283 | + 33 | +13·2 | 192 | 326 | +134 | + 69·8 |
| (வி) | 490·30 | 517·48 | + 27·18 | + 5·5 | 485·11 | 503·91 | + 18·80 | + 3·9 |
| கோதுமைமா* — (அ) | 206 | 225 | + 19 | + 9·2 | 137 | 308 | +171 | +124·8 |
| (பெ) | 85 | 100 | + 15 | +17·6 | 60 | 137 | + 77 | +128·3 |
| (வி) | 414·06 | 442·57 | + 28·51 | + 6·9 | 436·96 | 445·82 | + 8·86 | + 2·0 |
| சீனி — (அ) | 199 | 208 | + 9 | + 4·5 | 138 | 220 | + 82 | + 59·4 |
| (பெ) | 125 | 174 | + 49 | +39·2 | 70 | 185 | +115 | +164·3 |
| (வி) | 627·70 | 836·21 | +208·51 | +33·2 | 507·52 | 842·13 | +334·61 | + 65·9 |
| அரிசி, கோதுமைமா, சீனி ஆகியவற்றின் மொத்தப் பெறுமானம் | 460 | 557 | +97 | + 21·1 | 322 | 648 | +326 | +101·2 |

மூலங்கள்: உணவு ஆணையாளரின் திணைக்களம், இலங்கை சுங்கப்புள்ளி விபரங்கள்.

* கோதுமை மா இறக்குமதிகள் பற்றிய 1964ம் ஆண்டிற்குரிய உணவு ஆணையாளரின் தரவுகள் தற்காலிகமானவையாகும்.

சுங்கப் பதிவேடுகள், உணவு ஆணையாளராற் பெறப்பட்ட 1963ம் ஆண்டிற்குரிய உண்மையான இறக்குமதிகளை 1380 இலட்சம் ரூபாய்களாற் குறைத்து மதிப்பிட்டு, 1964ம் ஆண்டில் அவற்றை 910 இலட்சம் ரூபாய்களால் மிகையாக மதிப்பிட்டுள்ளன என்பது, இத்தரவுகளிலிருந்து காணக்கூடியதாக உள்ளது. வேறு சொற்களில் எடுத்தியம்பின், சுங்கத்தரவுகள் உணவு ஆணையாளரின் தரவுகளோடு முழுமையாக ஒத்திருந்திருப்பின், 1964ம் ஆண்டிற்குரிய அரிசி, கோதுமை மா, சீனி ஆகிய இறக்குமதிகளின் மொத்தப் பெறுமானம் 6480 இலட்சம் ரூபாய்களுக்குப் பதிலாக 5570 இலட்சம் ரூபாய்களாக இருந்திருக்கும். அத்துடன் அவை, தற்போதைய சுங்கத்தரவுகள் காட்டுவதற்கமைய, கடந்த வருடத்திலிருந்ததைவிட 101 சத வீதத்தால் உயர்வுற்றிராமல், ஆக 21 சதவீதத்தால் மட்டுமே உயர்வடைந்திருக்கும். இதற்கேற்ப, இவ்வருட மொத்த இறக்குமதிகளில் இவ்விறக்குமதிகளின் தாக்

கம், சுங்கத் தரவுகளிற் குறிப்பிடப்பட்டுள்ளதைவிட மிகக் குறைவாக இருந்திருக்கும். மேலும், இவ்விரு மூலங்களுக்குமிடையேயுள்ள பொருத்தமின்மை, தொகை, விலை ஒட்டிய தரவுகளையும் கூடப் பாதிக்கின்றது. எனவே, 1964ம் ஆண்டின்போது உணவு ஆணையாளராற் பெறப்பட்ட அரிசி, கோதுமை மா, சீனி ஆகிய இறக்குமதிகள் தொகையளவில் 1963ம் ஆண்டிலிருந்ததை விட முறையே, 7சதவீதங்களாலும், 9 சத வீதங்களாலும், 5 சத வீதங்களாலும் உயர்வடைந்திருக்கையில், சுங்கத்தரவுகள், இவை முறையே, 63 சதவீதங்களாலும் 125 சதவீதங்களாலும், 59 சதவீதங்களாலும், உயர்ச்சியுற்றுள்ளன எனத் தெரிவிக்கின்றன. இவ்வாண்டிற்குரிய ஒரு கூறிற்கான சராசரி விலைகள் பற்றிய கணிப்பும், இதே போன்று பாதிக்கப்பட்டுள்ளது. இது குறிப்பாகச் சீனியைப் பொறுத்த மட்டில் பொருந்துவதொன்றாகும். ஆதலின், உணவு ஆணையாளரின் இறக்குமதிகள், அரிசியினதும், கோதுமை மாவினதும் கொள்விலை கப்பற் கூலியின்படியான சராசரி விலைகள், முறையே, 6 சத வீதங்களாலும், 7 சத வீதங்களாலும் 1964ம் ஆண்டில் அதிகரித்துள்ளன எனக் காட்டும்போது, சுங்கத்தரவுகளில் பதியப்பட்ட இப்பண்ட இறக்குமதிகள் இவ்விலைகளில் முறையே 4 சத வீதங்களையும், 2 சத வீதங்களையும் கொண்ட குறைந்த அதிகரிப்புக்களையே காட்டுகின்றன. மறுபுறத்தில், உணவு ஆணையாளரால் சீனி இறக்குமதிகளுக்காக, இறுக்கப்பட்ட கொள்விலை, கப்பற் கூலியின்படியான சராசரி விலை 33 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், சுங்கத் தரவுகளின்படி இதன் அதிகரிப்பு 66 சதவீதமாக அமைந்துள்ளது.

1964ம் ஆண்டிற் பெறப்பட்ட இறக்குமதிகளுக்கு, உணவு ஆணையாளரால் இறுக்கப்பட்ட கொள்விலை கப்பற் கூலியின்படியான உயர்ந்த சராசரி விலைகள், உண்மையிலேயே இவ்வாண்டிற்கான மொத்த இறக்குமதிகளினது பெறுமானத்தின் அதிகரிப்பில் ஒரு பகுதிக்கு வகைகூறும் ஒரு காரணியாகும். உண்மையிலேயே விலைகள் 1963ம் ஆண்டிற்குரிய மட்டங்களில் நிலைத்திருந்தால், உணவு ஆணையாளர் பெற்ற அரிசி, கோதுமை மா, சீனி ஆகிய இறக்குமதிகளின் பெறுமானம், முறையே 150 இலட்சம் ரூபாய்களாலும், 70 இலட்சம் ரூபாய்களாலும், 430 இலட்சம் ரூபாய்களாலும் குறைக்கப்பட்டு அதன் மூலம் 650 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஒரு மொத்தக்குறைவு ஏற்பட்டிருக்கும்.

நுகர்வுப் பொருட்களின் ஏனைய இரு தொகுதிகளைப் பொறுத்தமட்டில் "ஆடை வகைகளின்"[1] இறக்குமதிகள், 820 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அல்லது 99 சத வீதம் கொண்ட விரிவைக் காட்டுகின்றன. "ஏனைய நுகர்வுப் பொருட்கள்" 210 இலட்சம் ரூபாக்களால் அல்லது 30 சத வீதத்தால் விரிவடைந்துள்ளன. இவற்றில் 60 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட அதிகரிப்பு "மருந்துகளும் மருந்துப் பொருட்களும்" என்ற விடயத்தின் இறக்குமதிகளில் 30 சதவீதத்தால் ஏற்பட்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது.

"நடுத்தரப் பொருட்கள்" தொகுதியிலே, வளமாக்கிகளின் இறக்குமதிகள், 100 இலட்சம் ரூபாய்களால் அல்லது 15 சதவீதத்தால் விரிவடைந்துள்ளன. இவ்விறக்குமதிகளின் ஒரு கூறிற்குரிய சராசரி கொ. கா. க. விலை, அந்தருக்கு ரூபா 12·39 சதங்களிலிருந்து, கடந்த ஆண்டிலிருந்ததைவிட அந்தருக்கு ரூபா 1·76 சதங்களால் அல்லது 17 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது. ஏனைய முக்கிய அதிகரிப்புகளில் "காகிதமும், காகித மட்டையும்" "நெசவுநூலும், தையல் நூலும்" ஆகிய விடயங்கள் அடங்குகின்றன. இவை, முறையே, 80 இலட்சம் ரூபாய்களால் அல்லது 30 சத வீதத்தாலும், 90 இலட்சம் ரூபாய்களால் அல்லது 69 சத வீதத்தாலும் அதிகரித்துள்ளன. "நிலஎரி எண்ணெய்ப் பொருட்களின்" இறக்குமதிகள், சுங்கத் தரவுகளின்படி 260 இலட்சம் ரூபாய்களை அல்லது 22 சதவீதத்தைக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளன. இவ்விறக்குமதிகளின் ஒரு கூறிற்குரிய சராசரி கொ. கா. க. பெறுமானம், கலனுக்கு 42 சதங்களாக இருந்து, கடந்த ஆண்டிலிருந்ததைவிட கலனுக்கு 8 சதங்களால் அல்லது 16 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றுள்ளது.

---

1 1963, 1964 ஆகிய ஆண்டுகளுக்கென வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப் பங்குகள், இவ்வாண்டுகளுக்கிடையே, இத்தகைய ஒரு அளவு கொண்ட ஆடை வகைகளின் இறக்குமதிகளின் விரிவை அனுமதித்ததாகத் தோன்றவில்லை. அநேகமாக, 1963ம் ஆண்டில் பெற்ற இறக்குமதிகளுட் சில, அல்லது அவ்வாண்டில் வரவேண்டியுள்ள சில இறக்குமதிகள், அடுத்து வரும் ஆண்டிற்குரிய சுங்கப் பதிவேடுகளில் பிரதிபலிக்கப்பட்டுள்ளனவாதல் வேண்டும்.

''முதலீட்டப் பொருட்கள்'' பகுப்பிலே, ''கட்டட ஆக்கப் பொருட்கள்'' ''இயந்திரங்களும், உபகரணங்களும்'' ஆகிய இரு விடயங்களின் இறக்குமதிகள், முறையே, 160 இலட்சம் ரூபாய்களால் அல்லது 21 சத வீதத்தாலும், 70 இலட்சம் ரூபாய்களால் அல்லது 5 சத வீதத்தாலும் விரிவடைந்துள்ளன. எனினும், ''போக்கு வரத்து சாதனங்கள்'' என்ற விடயத்தின் இறக்குமதிகள், 420 இலட்சம் ரூபாய் களால் அல்லது 42 சத வீதத்தாலான ஒரு தீட்சணமான சுருக்கத்தைக் காட்டு கின்றன.

## வர்த்தக அமைப்பு

பின்னிணைப்பு IIல் உள்ள அட்டவணை 36, பிரதான பிரதேசங்களின்படியும், நாணயப் பிரதேசங்களின்படியும் உள்ள வர்த்தக அமைப்பைக் காட்டுகின்றது.

பிரதான பிரதேசங்கள், நாணயப் பிரதேசங்கள் யாவற்றுக்குமான இலங்கை யின் ஏற்றுமதிகள், 1964ம் ஆண்டின்போது, அவற்றின் பெறுமானத்திலே வேறு பட்ட அளவுகளைக் கொண்ட அதிகரிப்புகளைக் காட்டின. டொலர் பிரதேசம் மட் டும் இதற்கு விதிவிலக்காகும். டொலர்ப் பிரதேசத்திற்கான ஏற்றுமதிகள் குறைந் தளவில் வீழ்ச்சியுற்றுள்ளன. இப்பிரதேசங்களிலும், நாணயப் பிரதேசங்களிலு மிருந்து பெற்ற இறக்குமதிகள், பெறுமானத்தில் அதிகரித்துள்ளன.

ஸ்டேர்லிங் பிரதேசத்திற்குச் செய்யப்பட்ட ஏற்றுமதிகள், இவ்வாண்டிலே 10190 இலட்சம் ரூபாய்களாக இருந்து, சென்ற ஆண்டிலிருந்ததிலும் பார்க்க 290 இலட்சம் ரூபாய்களால் அல்லது 3 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. ஆனால் இலங் கையின் மொத்த ஏற்றுமதிகளில் இப்பிரதேசத்திற்குரிய பங்கு, இவ்வாண்டில் 54 சதவீதமாக இருந்து, கடந்த ஆண்டிலிருந்ததைவிட 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந் துள்ளது. ஸ்டேர்லிங் பிரதேசத்திலிருந்து பெறப்பட்ட இறக்குமதிகள், 9410 இலட் சம் ரூபாய்களாக இருந்து, 2120 இலட்சம் ரூபாய்களால் அல்லது 29 சதவீதத்தால் மிக விரைவாக அதிகரித்துள்ளன. எனினும் மொத்த இறக்குமதிகளில் இப்பிர தேசத்திற்குரிய பங்கு, 48 சதவீதமாயிருந்து, 3 சதவீதத்தைக் கொண்ட ஒரு சிறு வீழ்ச்சியைக் காட்டியுள்ளது. இப்பிரதேசத்துடனுள்ள வர்த்தக மிகை, 790 இலட்சம் ரூபாய்களாக உள்ளது. இது கடந்த ஆண்டிலிருந்ததைவிட 1840 இலட்சம் ரூபாய் களாலான ஒரு கூர்மையான வீழ்ச்சியைக் கொண்டதாகும். டொலர் பிரதேசத் திற்கான ஏற்றுமதிகள் 2200 இலட்சம் ரூபாய்களிலிருந்து, 20 இலட்சம் ரூபாய்க ளால் அல்லது 1 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றிருக்கும்போது, இப்பிரதேசத்திலிருந்து பெறப்பட்ட இறக்குமதிகள், 770 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 50 இலட்சம் ரூபாய்களால் அல்லது 8 சத வீதத்தால் அதிகரித்துள்ளன. மொத்த ஏற்றுமதிகளி லும், இறக்குமதிகளிலும் இப்பிரதேசத்தின் பங்குகள், முறையே, 12 சதவீதமாக வும், 4 சத வீதமாகவும் இருந்து, கடந்த ஆண்டிலிருந்தவற்றுடன் ஒப்பிடுகையில் சிறு வீழ்ச்சிகளைக் காட்டுகின்றன. இப்பிரதேசத்துடனுள்ள வர்த்தக மிகை, 1440 இலட்ச ரூபாய்களாக இருந்தது. இது, 1963ம் ஆண்டிலிருந்ததைவிட 80 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

பொதுநல அமைப்பு நாடுகளுக்கான 9480 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஏற்று மதிகள், 190 இலட்சம் ரூபாய்களால் அல்லது 2 சத வீதத்தால் அதிகரித்திருக்கை யில், இந்நாடுகளிலிருந்து பெற்ற 7460 இலட்சம் ரூபாய்கள் கொண்ட இறக்குமதி கள், 1180 இலட்சம் ரூபாய்களால் அல்லது 19 சத வீதத்தால் மிகக் கூர்மையாக அதிகரித்துள்ளன. இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளிலும், இறக்குமதிகளிலும் பொதுநல அமைப்பு நாடுகளின் பங்குகள், முறையே, 51 சத வீதமாகவும், 38 சதவீத மாகவும் அமைந்திருந்து, கடந்த ஆண்டிலிருந்தவற்றுடன் ஒப்பிடுகையில், முன்னைய வை 6 சதவீதத்தாலும், பின்னையவை 10 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றுள்ளன. பொதுநல அமைப்புநாடுகளுடனுள்ள இலங்கையின் வர்த்தக மிகை, 2020 இலட்சம் ரூபாய்களாக இருந்து, முன்னைய ஆண்டினோடு ஒப்பிடுகையில் 990 இலட்சம் ரூபாய் ள் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது.

ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்திற்கான ஏற்றுமதிகள், 1680 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, சென்ற ஆண்டிலிருந்தவற்றைவிட 110 இலட்சம் ரூபாய்களால் அல்லது 7 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. இச் சமுதாயத்திலிருந்து வந்த இறக்குமதிகள், 2300 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 630 இலட்சம் ரூபாய்களால் அல்லது 38 சத வீதத்தால் மேலும் தீட்சணமாக அதிகரித்துள்ளன. இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளிலும், இறக்குமதிகளிலும் இச்சமுதாயத்தின் பங்குகள், முறையே, 9 சதவீதமாகவும் 12 சதவீதமாகவும் அமைந்து, சென்ற ஆண்டிலிருந்தவற்றைவிட சிறிதளவு மாற்றத்தையே காட்டின. இச் சமுதாயத்துடனுள்ள இலங்கையின் வர்த்தக நிலுவை, 1963ம் ஆண்டில் 90 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஒரு குறையைக் காட்டி, இவ்வாண்டின்போது மேலும் சீர்கேடான ஒரு நிலையை அடைந்துள்ளது இவ்வாண்டின்போது ஏற்பட்ட குறை, 620 இலட்சம் ரூபாய்களாக அமைந்துள்ளது. ஐரோப்பிய கட்டில்லா வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த நாடுகளுக்கான 5470 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஏற்றுமதிகள் 140 இலட்சம் ரூபாய்களால் அல்லது 3 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், இவற்றிலிருந்து பெற்ற 3640 இலட்சம் ரூபாய்கள் கொண்ட இறக்குமதிகள், 530 இலட்சம் ரூபாய்களால் அல்லது 17 சத வீதத்தால் மேலும் கூர்மையாக அதிகரித்துள்ளன. இந்நாடுகளுடனுள்ள இலங்கையின் வர்த்தக நிலுவை, 1820 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட ஒரு மிகையைப் பதிவு செய்துள்ளது. இது, கடந்த ஆண்டிலிருந்ததிலும் பார்க்க 390 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட ஒரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

அட்டவணை II ஆ—7

## சீனவுடன் இலங்கை நடாத்திய வர்த்தகம்

| வருடம் | ஏற்றுமதிகள். | | இறக்குமதிகள் | | வர்த்தக நிலுவை (பத்து இலட்சம் ரூபா) |
|---|---|---|---|---|---|
| | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகளின் சதவீதமாக | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த இறக்குமதிகளின் சதவீதமாக | |
| 1956 .. .. | 182 | 11·0 | 134 | 8·2 | + 48 |
| 1957 .. .. | 167 | 10·5 | 84 | 4·6 | + 83 |
| 1958 .. .. | 78 | 4·7 | 152 | 8·8 | — 74 |
| 1959 .. .. | 78 | 4·6 | 150 | 7·5 | — 72 |
| 1960 .. .. | 121 | 6·6 | 132 | 6·8 | — 12 |
| 1961 .. .. | 83 | 4·9 | 35 | 2·0 | + 48 |
| 1962 .. .. | 133 | 7·5 | 41 | 2·5 | + 92 |
| 1963 .. .. | 101 | 5·9 | 138 | 9·2 | — 37 |
| 1964 .. .. | 122 | 6·6 | 204 | 10·3 | — 82 |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்

*சீனவுடன் செய்துகொண்ட வர்த்தக—சென்மதி உடன்படிக்கையின் கீழ் பர்மாவிலிருந்து பெற்ற அரிசியைத் தவிர்த்து.

ஆசியாவினதும், தூரகிழக்கு நாடுகளினதும் பொருளாதார ஆலோசனைச் சபைப் பிரதேசத்தைச் சேர்ந்த நாடுகளுக்கான (தற்போது அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மேற்கு சமோவா ஆகிய நாடுகளும் இப்பிரதேசத்துள் அடங்குகின்றன) ஏற்றுமதிகள், 4280 இலட்சம் ரூபாய்களாக அமைந்திருக்கும் பொழுது, இப்பிரதேசத்திலிருந்து வந்த இறக்குமதிகள், 9670 இலட்சம் ரூபாய்களாக அமைந்துள்ளன. இப்பிரதேசம், இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளுள் 23 சதவீதத்திற்கும், இலங்கையின் மொத்த இறக்குமதிகளுள் 49 சதவீதத்திற்கும், வகை கூறியுள்ளது. இப்பிரதேசத்துடனுள்ள இலங்கையின் வர்த்தக நிலுவை, இவ்வாண்டிற்கு 5390 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட குறையைப் பதிவு செய்தது.

## செஞ்சீனவுடன் இலங்கை நடாத்திய வர்த்தகம்

செஞ்சீனவுடன் இலங்கை நடாத்திய வர்த்தகம் சம்பந்தமான விபரங்களை அட்டவணை II (ஆ) 7 காட்டுகின்றது.

1964ம் ஆண்டின்போது, இலங்கைக்கும் செஞ்சீனவுக்குமிடையே நடைபெற்ற வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டது. இலங்கையின் ஏற்றுமதிகள் இவ்வாண்டின்போது 210 இலட்சம் ரூபாய்களால் அல்லது 21 சதவீதத்தாலும் அது பெற்ற இறக்குமதிகள் இதைவிடக் கூடிய விரைவுடன் 660 இலட்சம் ரூபாய்களால் அல்லது 48 சதவீதத்தாலும், அதிகரித்துள்ளன. இதன் பயனக, 1963ம் ஆண்டில் 370 இலட்சம் ரூபாய்களாக இருந்த வர்த்தகக் குறை, இவ்வாண்டில் 820 இலட்சம் ரூபாய்களாக விரிவடைந்துள்ளது.

இரப்பர், செஞ்சீனவுக்குப் பிரதான ஏற்றுமதியாக உள்ள தன் இடத்தைத் தொடர்ந்தும் வகித்தது. இவ்வாண்டின்போதுள்ள இரப்பர் ஏற்றுமதிகள், 935 இலட்சம் ரூபாய்களாக இருந்து, 1963ம் ஆண்டிலிருந்தவற்றைவிட 79 இலட்சம் ரூபாய்களால் அல்லது 9சதவீதத்தால் அதிகரித்துள்ளன. ஏற்றுமதி செய்யப்பட்ட இரப்பரின் அளவு 729 இலட்சம் இறுத்தல்களாகும். (33,055 மெற்றிக் தொன்கள்). தேங்காயெண்ணெயின் ஏற்றுமதிகள், 208 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, கடந்த ஆண்டிலிருந்தவற்றைவிட 58 இலட்சம் ரூபாய்களால் அல்லது 39 சதவீதத்தால் அதிகரித்து விளங்கின. இவ்வாண்டின் புதிய ஏற்றுமதி விடயமாகத் தேயிலை அமைந்துள்ளது. இவ்வாண்டின்போது கப்பலேற்றப்பட்ட இத்தேயிலை ஏற்றுமதிகளின் அளவு 36 இலட்சம் இறுத்தல்களாகவும், பெறுமானம் 75 இலட்சம் ரூபாய்களாகவும் அமைந்துள்ளன. அரிசியே தொடர்ந்தும் பிரதான இறக்குமதிப் பொருளாக உள்ளது. 1964ம் ஆண்டின்போதுள்ள அரிசி இறக்குமதிகள், 1304 இலட்சம் ரூபாய்களாக இருந்து, சென்ற ஆண்டிலிருந்தவற்றை விட 532 இலட்சம் ரூபாய்களால் அல்லது 69 சதவீதத்தால் அதிகரித்து விளங்குகின்றன. அண்மைக் காலப் பகுதியில் வேறொரு முக்கிய இறக்குமதி விடயமாக விளங்கும் ஆடை வகைகளின் இறக்குமதிகள், 435 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட ஒரு கூர்மையான விரிவைக் காட்டின. இவை, 1963ம் ஆண்டிற்கான தொகையிலிருந்து 247 இலட்சம் ரூபாய்களால் (131 சதவீதம்) அதிகரித்துள்ளன. 189 இலட்சம் ரூபாய்கள் கொண்ட சீனி இறக்குமதிகள், 95 இலட்சம் ரூபாய்கள் (101 சதவீதம்) கொண்ட அதிகரிப்பைக் காட்டியுள்ளன.

செஞ்சீனவுடன் உள்ள வர்த்தக தீர்ப்பனவு உடன்படிக்கையின் விதிகளுக்கிணங்க முடிவாக்கப்பட்ட 1964ம் ஆண்டிற்கானதாயேடு, 35,000 மெற்றிக் தொன்கள் கொண்ட மட்டப்படுத்தப்பட்ட இரப்பரைச் செஞ்சீனவுக்கு விற்பனை செய்வதற்கும் செஞ்சீனவிலிருந்து 200,000 மெற்றிக் தொன்கள் கொண்ட அரிசியைக் கொள்வனவு செய்வதற்கும் ஏற்பாடு செய்துள்ளது.

## கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் ஐக்கிய சோவியத் சமத்துவக் குடியரசுடனும் இலங்கை நடாத்திய வர்த்தகம்

இலங்கை இந்நாடுகளுடன் நடாத்திய வர்த்தகம் பற்றிய விபரங்களை அட்டவணை II (ஆ) 8 காட்டுகிறது.

அட்டவணை II ஆ—8

### இருபக்கத் தீர்ப்பனவுக் கணக்குகள்

ருசியாவுடனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும்* இலங்கை நடாத்திய வர்த்தகம்

| வருடம் | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள் | | வர்த்தக நிலுவை (பத்து இலட்சம் ரூபா | வர்த்தக சுழல்வு | |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகளின் சதவீதமாக | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த இறக்குமதிகளின் சதவீதமாக | | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த வர்த்தகச் சுழற்சியின் சதவீதமாக |
| 1956 .. | 1·3 | 0·1 | 8·0 | 0·5 | — 6·7 | 9·3 | 0·3 |
| 1957 .. | 6·5 | 0·4 | 10·6 | 0·6 | — 4·1 | 17·1 | 0·5 |
| 1958 .. | 24·7 | 1·5 | 9·2 | 0·5 | +15·5 | 33·9 | 1·0 |
| 1959 .. | 28·4 | 1·7 | 23·8 | 1·2 | + 4·6 | 52·2 | 1·4 |
| 1960 .. | 58·1 | 3·3 | 21·8 | 1·1 | +36·3 | 79·9 | 2·1 |
| 1961 .. | 78·4 | 4·7 | 51·8 | 3·0 | +26·6 | 130·2 | 3·9 |
| 1952 .. | 87·1 | 4·9 | 90·3 | 5·4 | — 3·2 | 177·4 | 5·2 |
| 1963 .. | 86·1 | 5·1 | 117·1 | 7·8 | —31·0 | 203·2 | 6·3 |
| 1964 .. | 159·4 | 8·7 | 158·2 | 8·0 | + 1·2 | 317·6 | 8·3 |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்

* புல்கேறியா, செக்கோசிலவாக்கியா கிழக்கு ஜெர்மனி, கங்கேரி, போலாந்து, ருமேனியா, யூகோசிலேவியா.

சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில் 1964ல் ஐக்கிய சோவியத் சமத்துவக் குடியரசுடனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் இலங்கை நடாத்திய வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க விரிவு தென்பட்டது. ஏற்றுமதிகளை சென்ற ஆண்டோடு ஒப்பு நோக்குகையில் ரூபாய் 733 இலட்சங்களால் அல்லது 85 சதவீதத்தால் ஏற்றமடைந்தன. இந்நாடுகளில் இருந்து பெற்ற இறக்குமதிகள் அதிகரிப்புக் கூர்மைக் குறைவாக அமைந்திருந்ததெனினும் அவையும் ரூபாய் 411 இலட்சங்களால் அல்லது 35 சதவீதத்தால் அதிகரித்தன. 1962லும் 1963லும் முறையே ரூபாய் 32 இலட்சக் குறைவையும் ரூபா 310 இலட்சக் குறைவையும் பதிவு செய்த, இந்நாடுகளுடன் இலங்கைக்கு உள்ள வர்த்தக நிலுவை இவ்வாண்டில் ரூபாய் 12 இலட்ச மிகையை பதிவு செய்து பெருமளவு திருத்தத்தைக் காட்டியுள்ளது.

1964ல் ஐக்கிய சோவியத் சமத்துவக் குடியரசு தொடர்ந்து இலங்கையின் இப்பிரதேசத்து பிரதான வாடிக்கையாளரான தனது நிலையைப் பயன்படுத்தும் விதமாக விளங்கியது. இப்பிரதேசத்திற்கான மொத்த ஏற்றுமதிகளில் 63 சத வீதத்திற்கு அல்லது ரூபாய் 1010 இலட்ச ரூபாய்களுக்கு ஐக்கிய சோவியத் குடியரசு காரணமாயிற்று. இவ்வாண்டில் இந்நாட்டிற்கான ஏற்றுமதிகள் ரூபாய் 681 இலட்சங்களால் அல்லது (207 சதவீதமாக) விரிவுற்றன. இப்பிரதேசத்திற்குச் செய்யப்பட்ட மொத்த ஏற்றுமதியின் கூரிய விரிவுக்கு இதுவே பெருமளவு காரணியாக அமைந்தது. இரப்பர் ஏற்றுமதியின் கூரிய அதிகரிப்பே ஐக்கிய சோவியத் சமத்துவக் குடியரசிற்கு செய்யப்பட்ட ஏற்றுமதி விரிவுக்கு முக்கிய காரணமாகும். 1963ல் ரூபாய் 5 இலட்சமாய் மட்டுமே இருந்த இவ்விரப்பர் ஏற்றுமதி 1964ல் ரூபாய் 491 இலட்சமாக உயர்ந்து இவ்வாண்டின் பிரதான ஏற்றுமதிப் பண்டமாக அமைந்தது. ரூபாய் 332 இலட்சங்களாய் இருந்த தேயிலை ஏற்றுமதி ரூபாய் 141 இலட்சங்களால் அதாவது 74 சதவீதத்தால் அதிகரிக்க ரூபாய் 171 இலட்சமாய் இருந்த தேங்காய் எண்ணை ரூபாய் 61 இலட்சத்தால் அதாவது 55 சதவீதத்தால் அதிகரித்தது. பிரதேசத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தொகைகள் போலந்திற்கான ஏற்றுமதிகளின் தொகை ரூபாய் 313 இலட்சமாக அல்லது 20 சதவீதமாக அமைந்தது. இது ரூபாய் 98 இலட்சமாக அல்லது 46 சதவீதமாக அதிகரிப்பைக் காட்டியது. சென்ற ஆண்டிற் போல் இரப்பர் தான் பிரதான ஏற்றுமதியில் பொருளாக விளங்கியது. இது இவ்வொண்டில் ரூபாய் 257 இலட்ச ரூபாயாக விளங்கி சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில் 65 இலட்சத்தால் அல்லது 34 சதவீதத்தால் அதிகரித்தது. ஜெர்மன் மக்களாட்சிக் குடியரசுக்கான (கிழக்கு ஜெர்மனி) ஏற்றுமதி உரிய முறையில் 102 இலட்சங்களால் 537 சதவீதத்தால் அதிகரித்து ரூபாய் 12 இலட்சங்களாக அல்லது இப்பிரதேசத்திற்கான 8 சதவீதமாக விளங்கியது. தேங்காய் எண்ணையின் ஏற்றுமதி ரூபாய் 86 இலட்சங்களாக அமைந்தது. இது சென்ற ஆண்டிலும் பார்க்க ரூபாய் 74 இலட்சமாக அதிகரித்திருந்தது. ருமேனியாவிற்கு 1963ல் செய்யப்பட்ட ஏற்றுமதித் தொகையான ரூபாய் 233 இலட்சங்கள் ரூபாய் 17 இலட்சங்களாக கூரிய முறையில் வீழ்ச்சியுற்றது.

இலங்கையில் இப்பிரதேசத்து இறக்குமதிகளைப் பொறுத்தவரை இவ்வாண்டில் பிரதானநிரம்பலாளராக ஐக்கிய சோவியத் சமத்துவ குடியரசும் போலந்தும் செக்கோசிலவாக்கியாவும் விளங்கி இப்பிரதேசத்திலிருந்து பெறப்பட்ட மொத்த இறக்குமதியில் முறையே ரூபாய் 688 இலட்சங்களுக்கும் (43 சதவீதம்) ரூபாய் 455 இலட்சத்திற்கும் (29 சதவீதம்) ரூபாய் 206 இலட்சத்திற்கும் (13 சதவீதம்) வகை செய்தன. ஜெர்மன் மக்களாட்சிக் குடியரசில் (கிழக்கு ஜெர்மனி) இருந்து பெற்ற இறக்குமதி ரூபாய் 92 இலட்சமாக அமைந்திருந்தது. சென்ற ஆண்டிற் போல நிலஎரி எண்ணை (பெற்றோலியம்) பொருட்களே ஐக்கிய சோவியத் சமத்துவக் குடியரசிலிருந்து பெறப்பட்ட பிரதான இறக்குமதிப் பொருளாக விளங்கியது. இப்பொருட்களின் இறக்குமதி ரூபாய் 422 இலட்சமாக விளங்கியது. இது சென்ற ஆண்டிலும் பார்க்க ரூபாய் 152 இலட்சங்களால் (56 சத வீதத்தால்) கூடியிருந்தது. இவ்விறக்குமதி அந்நாட்டிலிருந்து பெறப்பட்ட மொத்த இறக்குமதிகளின் 61 சதவீதத்தினையும் ஏனைய மூலங்களில் இருந்துவந்த இப்பொருட்களின் இறக்குமதிகளில் 45 சத

வீதத்தினையும் கொண்டவையாயின. ரூபாய் 76 இலட்சங்கள் கொண்ட தேயிலைப் பெட்டி இறக்குமதி ரூபாய் 39 இலட்சங்களால் (105 சதவீதத்தால்) அதிகரித்திருந்தது. எல்லா மூலங்களிலிருந்து பெறப்பட்ட தேயிலைப் பெட்டி நிரம்பல்களில் 51 சதவீதமாக இது அமைந்தது. போலந்து, செக்கோசிலேவாக்கியா, ஜெர்மன் மக்களாட்சிக் குடியரசு முதலிய நாடுகளில் இருந்து பெறப்பட்ட பிரதான இறக்குமதியாக சீனி விளங்கியது. இம்முந்நாடுகளிலிருந்து செய்யப்பட்ட மொத்த இறக்குமதியில் சீனி இறக்குமதி முறையே ரூபாய் 314 இலட்சமாக (69 சதவீதம்) ரூபாய் 118 இலட்சமாகவும் (57 சதவீதம்) ரூபாய் 33 இலட்சமாகவும் (36 சத வீதம்) அமைந்து விளங்கியது.

## இருபுடைத் தீர்ப்பனவுக் கணக்குகள்:

இலங்கைக்கும் செஞ்சீனா, ஐக்கிய சோவியத் சமத்துவக் குடியரசிற்கும் கிழக்கு ஐரோப்பிய மத்திய கிழக்கு நாடுகள் சிலவற்றிற்குமிடையே முடிவாக்கப்பட்ட தீர்ப்பனவு உடன்படிக்கைகளிற்கிணங்க அமைக்கப்பட்ட இருபுடைத் தீர்பனவுக் கணக்குகளினதுதேறிய மிச்சங்களின் காலாண்டு நிலையை அட்டவணை II ஆ (9) எடுத்துக் காட்டுகிறது.

அட்டவணை II ஆ—9

### சகல தீர்ப்பனவுக் கணக்குகளிலும் உள்ள மிச்சங்களின் கால் வருட நிலை, 1959 — 1964

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலமுடிவில் தேறிய விலை | சீனா, ருசியா, ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகள்* | | மத்திய கிழக்கு நாடுகள்** | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | போகுமதி | வருமதி | போகுமதி | வருமதி | போகுமதி | வருமதி |
| 1959 பங்குனி .. .. | 10·3 | — | — | — | 10·3 | — |
| ஆனி .. .. | — | 4·5 | — | — | — | 4·5 |
| புரட்டாதி .. .. | 22·2 | — | — | — | 22·2 | — |
| மார்கழி .. .. | — | 11·7 | — | — | — | 11·7 |
| 1960 பங்குனி .. .. | — | 18·9 | — | — | — | 18·9 |
| ஆனி .. .. | — | 2·6 | — | — | — | 2·6 |
| புரட்டாதி .. .. | — | 13·3 | — | — | — | 13·3 |
| மார்கழி .. .. | — | 26·5 | — | — | — | 26·5 |
| 1961 பங்குனி .. .. | — | 39·4 | — | — | — | 39·4 |
| ஆனி .. .. | — | 25·5 | — | 1·7 | — | 27·2 |
| புரட்டாதி .. .. | 11·8 | — | — | 1·9 | 9·9 | — |
| மார்கழி .. .. | 10·6 | — | — | 5·4 | 5·2 | — |
| 1962 பங்குனி .. .. | — | 6·9 | — | 7·0 | — | 13·9 |
| ஆனி .. .. | — | 42·8 | — | 10·7 | — | 53·5 |
| புரட்டாதி .. .. | — | 22·3 | — | 10·8 | — | 33·1 |
| மார்கழி .. .. | — | 7·3 | — | 5·4 | — | 12·7 |
| 1963 பங்குனி .. .. | — | 0·2 | — | 2·7 | — | 2·9 |
| ஆனி .. .. | 12·2 | — | 0·6 | — | 12·8 | — |
| புரட்டாதி .. .. | — | 6·5 | 2·1 | — | — | 4·4 |
| மார்கழி .. .. | 31·1 | — | 3·1 | — | 34·2 | — |
| 1964 பங்குனி .. .. | 52·3 | — | — | 0·3 | 52·0 | — |
| ஆனி .. .. | 58·4 | — | 2·4 | — | 60·8 | — |
| புரட்டாதி .. .. | 59·1 | — | — | 1·9 | 57·2 | — |
| மார்கழி .. .. | 57·0 | — | — | 5·5 | 51·5 | — |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி.

* புல்கேறியா, செக்கோசிலவாக்கியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு (கிழக்கு ஜெர்மனி) கங்கேரி, போலந்து, ருமேனியா ஆகியன.

** ஐக்கிய அரபுக் குடியரசு, இருன், சிரியா ஆகியன.

கவனிப்பு:— போகுமதி = இலங்கையிலிருந்து பெறவேண்டியது.
= இலங்கைக்குச் சேரவேண்டியது.

அட்டவணை II ஆ—10

## இறக்குமதிக் கட்டுப்பாடு — 1964ம் ஆண்டிலுள்ள தனித்தனி இறக்குமதி உத்தரவுச்சீட்டு முறைகளின் படுகை

| | இறக்குமதகளின்படியான பெறுமானம் | | | | | | | | மாறறம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1961 | | 1962 | | 1963 | | 1964 | | 1961ல் இருந்து 1962 | | 1962ல் இருந்து 1963 | | 1963ல் இருந்து 1964 | |
| | பத்து இலட்சம் ரூபாய் களில் | மொத்தத்தின் சதவீத மாக | பத்து இலட்சம் ரூபாய் களில் | மொத்தத்தின் சதவீத மாக | பத்து இலட்சம் ரூபாய் களில் | மொத்தத்தின் சதவீத மாக | பத்து இலட்சம் ரூபாய் களில் | மொத்தத்தின் சதவீத மாக | மொத்த மாக (பத்து இலட்சம் ரூபாகளில்) | சதவீத மாக | மொத்த மாக (பத்து இலட்சம் ரூபாகளில்) | சதவீத மாக | மொத்த மாக (பத்து இலட்சம் ரூபாகளில்) | சதவீத மாக |
| **1964ம் ஆண்டின் தொடக்கத்திலுள்ள கட்டுப்பாடுகளின் படுகை(ஏறக்குறைய)** **ஆவணி 13, 1964** .. | 1,014 | 59.5 | 1,021 | 61.5 | 849 | 57.0 | 944 | 47.8 | +7 | +0.7 | —172 | —16.8 | +95 | +11.2 |
| இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 15/64 கோழிப்பண்ணை, இயற்கைத் தேன், மக்கரோனி, ஸ்பாகெற்றியும், வேமிசெல்லியும், உண்ணுப் பழப் பருப்புக்கள், பழ வற்றல், வத்துய காய்கறிகள், பனங் கட்டியும், விலங்குகளுக்குரிய உணவுப் பொருட்களும் உட்பட்ட பல்வேறு உணவுப் பொருட்கள் .. .. | 2 | 0.1 | 2 | 0.1 | 5 | 0.3 | 4 | 0.2 | — | — | +3 | +150.0 | — 1 | —20.0 |
| **ஆவணி 25, 1964** இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல்கள் இல. 16/64, 17/64ம் பாலும் பாற்பொருட்களும் (குழந்தைகளுக்கும் பிணியாளருக்குமான உணவுப் பொருட்கள்) வெண்ணெயும், ஏனைய பாற்பண்ணைப் பொருட்களும் | 65 | 3.8 | 77 | 4.6 | 78 | 5.2 | 94 | 4.8 | +12 | +18.5 | +1 | +1.3 | +16 | +20.5 |
| **கார்த்திகை 10, 1964** இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 21/64 செத்தல் மிளகாயும் உருளைக் கிழங்கும் .. .. | 53 | 3.1 | 59 | 3.6 | 64 | 4.3 | 72 | 3.6 | +6 | +11.3 | +5 | +8.5 | + 8 | +12.5 |
| **கார்த்திகை 25, 1964** இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 22/64—உத்தரவுச் சீட்டு நாமாவளி இல. 1ல் உள்ளதும், முன்பு தனிப்பட்ட இறக்குமதி உத்தரவுச் சீட்டுக்கு உட்பட்டிராததுமான இல. 1லிருந்து 42 வரையுமுள்ள விடயங்கள். இவை அவரைக்காய், பயறு, பருப்பு வகைகள், கறிவகைகள், தானியம், கைப்புப் பூண்டு, வெள்ளைப் பூண்டு, ஆகியனவற்றை உள்ளடக்கும் .. | 60 | 3.5 | 60 | 3.6 | 53 | 3.6 | 68 | 3.4 | — | — | —7 | —11.7 | +15 | +28.3 |
| **மார்கழி 15, 1964** இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 25/64 மருந்துவகை .. .. | 28 | 1.6 | 26 | 1.6 | 23 | 1.5 | 27 | 1.4 | —2 | —7.1 | —3 | —11.5 | + 4 | +17.4 |
| **1964 ஆண்டு நிலவிய கட்டுப்பாடுகளின் மொத்தப் படுகை (ஏறக்குறைய)** | 1,222 | 71.7 | 1,245 | 75.0 | 1,072 | 71.9 | 1,209 | 61.2 | +23 | +1.9 | —173 | —13.9 | + 137 | +12.8 |

மூலங்கள்: இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல்கள், இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்.

படுகை பற்றிய எண் தொகைகள் ஓரளவு ஏறக்குறைய உள்ள தொகைகளாகும். ஏனெனில், கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு விடயத்தையும் (பல சந்தர்ப்பங்களில் அவை சிறு அளவுடையனவாக அல்லது வேறு விதமாக வகுக்கப்பட்டமையால்) சுங்கத் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களிலிருந்து அவற்றைப் பிரித்து அறிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றது.

## வர்த்தகக் கொள்கை

இறக்குமதிக் கட்டுப்பாடு:

1963ம் ஆண்டுல், இறக்குமதி உத்தரவுக் கட்டுப்பாடுகளின் அதிகரிப்பு மிகக் கணிசமானளவில்ஏற்பட்டது.1964ம் ஆண்டின்போதும், இக்கட்டுப்பாடுகள் மேலும் அதிகரிக்கப்பட்டன. இவ்வாண்டு மார்கழி 15ல் மருந்துப் பொருட்களின் இறக்குமதிகள் தனிப்பட்ட இறக்குமதி உத்தரவுச் சீட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதால், நடைமுறையிலிருந்த வெளிப்படைப் பொது உத்தரவுச் சீட்டுமுறை முற்றாக வழக்கற்றுப் போனது. முக்கியமற்ற ஒரு சில எஞ்சிய விடயங்களைத் தவிர்த்து, தனியார் துறையில் முழு இறக்குமதிப் பொருட்களும், தனிப்பட்ட உத்தரவுச் சீட்டுக் கட்டுப்பாடுகளின் கீழ் கொண்டுவரப்பட்டன. இவ்வாண்டில் மேலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட முக்கியமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் விபரங்களும், அத்துடன் அவற்றின் விளைவுகள் பற்றிய தொகையளவு மதிப்பீடும் அட்டவணை II (ஆ) 10ல் தரப்பட்டிருக்கின்றன.

இவ்வருடத்தின்போது கொண்டுவரப்பட்ட பிரதானமான இக்கட்டுப்பாடுகளமைந்த இறக்குமதிகளின் மொத்தப் பெறுமானம், 1963ம் ஆண்டினது இறக்குமதிகளுடன் அளவிட்டு நோக்குகையில், அவ்வருடத்தின் போதுள்ள இறக்குமதிகளின் பெறுமானத்தில் 2230 இலட்சம் ரூபாக்களாக அல்லது 15 சதவீதமாக விளங்கியது. இவற்றின் பெறுமானம், 1964ல் 420 இலட்சம் ரூபாக்களால் 2650 இலட்சம் ரூபாக்களுக்கு அதிகரித்தது. ஆனல் இவ்வாண்டின் மொத்த இறக்குமதிகளில் இவற்றின் பங்கு 13 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. ஆண்டிறுதியில் நடைமுறையிலிருக்கும் கட்டுப்பாடுகள் அமைந்த இறக்குமதிகளின் பெறுமானம், 1963ம் ஆண்டினது இறக்குமதிகளோடு ஒப்பிட்டுக் கணிக்கையில் அவ்வருடத்து இறக்குமதிகளின் பெறுமானத்தில் 10720 இலட்சமாக அல்லது 72 சதவீதமாக விளங்கியது. 1964ம் ஆண்டு, இவ்விறக்குமதிகளின் பெறுமானம் 1370 இலட்சம் ரூபாக்களால் 12090 இலட்சம் ரூபாக்களுக்கு அதிகரித்தது. ஆனல் இவ்வாண்டு அவற்றின் மொத்த இறக்குமதிகளின் பங்கு 6 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

நிதியமைச்சர், ஆடி 30, 1964ல் நிகழ்த்திய தமது வரவு செலவுத் திட்ட, உரையில், 1964ம் ஆண்டு வெளிநாட்டுச் செலாவணி வரவு செலவுத் திட்டத்தில் செய்த இறக்குமதிப் பகுப்புகளின் திருத்தத்தை வெளியிட்டார். இத்திருத்தத்தின்படி இவ்வாண்டு மொத்த இறக்குமதிப் பகுப்புக்கள் 18460 இலட்சம் ரூபாக்களாக விளங்கின. இவற்றில் 10,200 இலட்சம் ரூபாக்கள் (7750 இலட்சம் ரூபாக்கள் பெறுமதியான அரசாங்க நேரடி உணவுப்பொருட்களும், உணவல்லாத பொருட்களுமான இறக்குமதிகளும், 2450 இலட்சம் ரூபாக்கள் பெறுமதியான வெளிப்படைப் பொது உத்தரவுச் சீட்டு இறக்குமதிகளும் உடபட) பெறுமதியான இறக்குமதிகள் தனிப்பட்ட உத்தரவுச் சீட்டிற்கு உட்பட்டனவாயும், 8260 இலட்சம் ரூபாக்கள் பெறுமதியான இறக்குமதிகள், அப்படியான இறக்குமதிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டனவாயும் விளங்கின. பின்னர் இவ்வாண்டில் இப்பகுப்புக்கள் மேலும் திருத்தியமைக்கப்பட்டன.

### தீர்வைகள்:

ஏற்றுமதித் தீர்வைகள்: இவ்வருடத்தின்போது ஏற்றுமதித் தீர்வைகளில் கீழ்க் காணும் மாற்றங்கள் ஏற்பட்டன. வைகாசி 12, 1964 தேங்காய்ப் புண்ணாக்கின் மேலுள்ள தீர்வை தொன் ஒன்றுக்கு 50 ரூபாய்களிலிருந்து தொன் ஒன்றுக்கு 25 ரூபாக்களாகக் குறைக்கப்பட்டது.

ஆவணி 1, 1964: கொழும்பு ஏலங்களில் விற்கப்பட்டு, அங்கேயே களஞ்சியத்திலிடப்பட்டு, அதன்பின்னர் காலி, திருக்கோணமலை,ஆகிய துறைமுகங்களினூடாக ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைகளின் மேலுள்ள இறுத்தலுக்கு 33 சதங்கள் கொண்ட ஒரு சலுகை விகிதத் தீர்வையானது விலக்கப்பட்டு அவற்றின்மேல் இறுத்தலுக்கு 35 சதங்கள் கொண்ட பொது விகிதத் தீர்வை புகுத்தப்பட்டது.

ஆவணி **1, 1964**: இரத்தினக் கற்களுக்கும், மருவிய இரத்தினக் கற்களுக்கும் 5 சதப் பெறுமான விகித வரி விதிக்கப்பட்டது.

ஆவணி **9, 1964**: தெங்குப் பொருட்களின் மேல் ஒரு சாய்வுப் பெறுமானமான தீர்வைகள், தை, 7, 1963ம்ஆண்டு நடைமுறைக்கு வந்த தீர்வைக்குப் பதிலாகப் புகுத்தப்பட்டன. 1963ம்ஆண்டு அமைப்பின்படி ஸ்றெயிற்ஸ் (அதாவது சிங்கப்பூர்) தேங்காய்யெண்ணெய்க்கு இலண்டனில் நிலவிய சராசரிக் கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி, உட்பட்ட விலையை அளவாகக் கொண்டு ஒவ்வொரு வாரத்திற்குமாகப் பிரதம சுங்க அதிகாரியால் மதிப்பிடப்பட்டு அறிவிக்கப்பட்டதுற்கேற்ப, இப்பொருட்களின் மேல் தீர்வைகள் சுமத்தப்பட்டன. இப்புதிய சாய்வுப் பெறுமான தீர்வைகளும், போன்ற விலைகளில் மதிப்பீட்டையே அடிப்படையாகக் கொண்டன. ஆனல் இத் தேவைக்குப் பயன்படுத்தப்பட்ட விலைகள் பிலிப்பையின் கொப்பராவிற்த இலண்டனில் நிலவிய சராசரிக் கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி உட்பட்ட விலையாகும். இச்சாய்வுப் பெறுமனத்தின் ஆகக் குறைந்த தீர்வைகள் பின்வருமாறு:

*பிரதம சுங்க அதிகாரியால் மதிப்பிடப்பட்டு அறவிக்கப்பட்ட பிலிப்பையின்ஸ் கொப்பராவிற்கு இலண்டனில் நிலவிய சராசரிக் கொள்விலை காப்புறுதி கப்பற்கூலி உட்பட்ட விலை:*

| | | ஒரு தொன் கொப்பராவிற்கான தீர்வை | | ஒரு தொன் தே. எண்ணைக்கான தீர்வை |
|---|---|---|---|---|
| | | ரூ. சதம். | | ரூ. சதம். |
| ஐக்கிய அமெரிக்க 124 டொலர்களின்கீழ் | — | 115·00 | — | ஒன்றுமில்லை |
| ஐ. அ. 124 டொலர்கள் | — | 115·00 | — | ,, |
| ஐக்கிய அமெரிக்க 124 டொலர்களுக்குக் கூடியும் ஆனல் 126 டொலர்களுக்குக் கூடாமலும் | — | 117·93 | — | 4·76 |
| ஒரு தொன் தேங்காய்த் துருவலுக்கான தீர்வை | — | | — | ஒன்றுமில்லை |
| ஆயிரம் தேங்காய்களுக்கான தீர்வை | — | | — | 28·75 |
| | | 4·04 | — | 29·48 |

மதிப்பிடப்பட்ட கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி, உட்பட்ட விலை ஐக்கிய அமெரிக்க 278 டொலர்கள் ஆகவிருக்கும் பொழுது, இப்பொருட்களின் மேல் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய தீர்வைகள் முறையே 470 ரூபாக்களாகவும், 576 ரூபாக்களாகவும், 117 ரூபாக்களாகவும் விளங்கின.

## இறக்குமதித் தீர்வைகள்:

ஆவணி 1, 964ம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த 1964/65ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட வழிமுறைகள், நிலஎரி எண்ணெய்ப் பொருட்களின் தீர்வைகளில் கீழ்க்காணும் அதிகரிப்புக்களை உள்ளடக்கின.

| பொருட்கள் | | தீர்வையின் அதிகரிப்பு. ஒரு கலனுக்கு சதங்கள். |
|---|---|---|
| திறமையான பெற்ரோல் | — | 12 சதங்கள் |
| சாதாரண பெற்ரோல் | — | 10 ,, |
| மண்ணெண்ணெய் | — | 10 ,, |
| தன்னியக்கப் பொறிகளுக்கான டீசல் எண்ணெய் | — | 7 ,, |
| தூய்மையாக்கப்படாத டீசல் எண்ணெய் | — | 7 ,, |
| உருக்குப் பொறிக்கான எண்ணெய் | — | 1 ,, |
| கொழுப்பெண்ணைகள் | — | 20 ,, |

இவ்வழி முறைகளை முன்மொழியும் போது நிதியமைச்சர் கூறியதாவது:

''இறக்குமதித் தீர்வையின் இவ்வதிகரிப்புகள் நுகர்ச்சியாளரைத் தாக்காது இலங்கை நிலஎரி எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தால் முற்ருக ஏற்றுக் கொள்ளப்படும். இவ்விறக்குமதித் தீர்வைகளை அதிகரிப்பதன் முக்கிய நோக்கம், தற்போ

தையநிரம்பற்காரரிடமிருந்து இலங்கை நிலளரி எண்ணெய்க் கூட்டுத்தாபனம் அனுப விக்கும் கழிவுகளை அரசாங்க அரசிறைக்குச் சேர்ப்பதாகும். உண்மையில், இலங்கை அரசாங்கத்திற்கு கூட்டுத்தாபனத்தால் இலாபமாக வழங்கப்படும் இக் கழிவுகளைத் தொர்ந்தும் கூட்டுத்தாபனத்தில் உண்டாக்கினல் இது கூட்டுத்தாபன நிதியமைப் பில் ஒரு பிழையான வடிவத்தைக் காட்டுவதேயாகும். அரசாங்க அரசிறைக்குரிய இலாபம் 150 இலட்சம் ரூபாக்களாகும்.[1]

## வர்த்தக ஒப்பந்தங்கள்:

இவ்வாண்டின்போது, கீழ்க்காணும் நாடுகளுடன் கொண்ட வர்த்தக அல்லது சென்மதி ஒப்பந்தங்கள் முடிவாக்கப்பட்டன.

இந்தியா: ஐப்பசி 28, 1961ம் ஆண்டு இந்திய இலங்கை வர்த்தக ஒப்பந்தத்தின் படி, 1964ம் ஆண்டுக்குரிய வர்த்தக ஒழுங்குகளின் முடிவுக்கான இணக்கப் பேச் சுகள் தை மாதம் நடைபெற்றன. இவ்வொழுங்குகள் இலங்கையிலிருந்து 15,000 தொன்கள் கொப்பராவும், 5,000 தொன்கள் தேங்காய் எண்ணெய்யும், 3,000 தொன்கள் இரப்பரும் ஏற்றுமதி செய்வதற்கு இடமளித்தன. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கான ஒழுங்குகள், ஆகக் குறைந்தது 21,000 தொன்கள் கரு வாட்டையும், 1,500 தொன்கள் புளியையும், 40,000 அந்தர்கள் சர்க்கரையையும், 300,000 ரூபாக்களுக்கு பெறுமதியான நூற்சேலைகளையும் கொள்வனவு செய்வதற்கு இடமளித்தன.

யூகோசிலாவாக்கியா: இருநாடுகளுக்குமிடையில் இரு பக்கத்திற்கும் ஏறக்குறைய 10 இலட்சம் ஸ்ரேர்லிங் பவுண் பெறுமதியான பொருள் மாற்றத்திற்கு இடமளித்து 1964ம் ஆண்டு மாசி மாதம் 14ந் திகதி யூகோசிலேவியாவுடன் ஒருதாயேடு கை யொப்பமிடப்பட்டது. இத் தாயேடு ஒரு வருடத்திற்குச் செல்லுபடியாகவிருந் தது. ஆனல் பரஸ்பர உடன்பாட்டுடன் மேலுங் கூடிய காலங்களுக்கு இதை நீடிக் கக் கூடியதாயிருந்தது. தன்னளவில் சமநிலை பெறும் அடிப்படையிலே அமைய வேண்டுமென இத்தாயேட்டின்படி ஏற்பாடு செய்யப்பட்ட வர்த்தகம், இரு நாடு களுக்குமிடையில் 1953ம் ஆண்டு ஆடி மாதம் 30ம் திகதி முடிவு செய்யப்பட்டுத் தற் பொழுது நடைமுறையிலிருக்கும் வர்த்தக ஒப்பந்தத்தின்படி நடைபெறும் வழமை யான வர்த்தகத்துடன் கூட அமைத்திருந்தது.

ஐக்கிய சமத்துவ சோவியத் குடியரசு: 1965–67 காலப்பகுதியின்போது பொருட் களின் பரஸ்பர பரிமாறுதல்களின் தொடர்பாக 1965ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி தொடக்கம் செல்லுப்படியாகக் கூடிய ஒப்பந்தம் ஒன்று ஐக்கிய சமத்துவ சோவியத் குடியரசுடன் ஐப்பசி 1, 1964ல் முடிவாக்கப்பட்டது. இப் பரிமாறுதல் கள், மாசி, 1958ம் ஆண்டின் வர்த்தகச் சென்மதி உடன்படிக்கை விதிகளுக்கிணங்க நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். மாசி, 8, 1958ம் ஆண்டு சென்மதி உடன்படிக் கையில் குறிப்பிட்டபடி பரஸ்பர சுழல்வுக் கொடுகடன் தொகையில் 300,000 பவுண் களில் இருந்து 500,000 பவுண்கள் அதிகரிப்பிற்கும் இவ்வளவிலும் கூடிய மீதியான நிலுவையைச் செலுத்துவதற்குரிய கால எல்லையை ஒரு மாதத்திலிருந்து 3 மாதங் களுக்கான நீடிப்பிற்கும் இடமளிக்கும் கடிதப் பரிமாறல்களும் இவ்வொப்பந்தத் துடன் சேர்ந்து வந்தது.

சீன மக்கட் குடியரசு: சீன மக்கட் குடியரசுடன் 1962ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3ம் திகதி செய்துகொண்ட வர்த்தகச் சென்மதி உடன்படிக்கையின் விதிகளுக் கிணங்க, 1965ம் ஆண்டின் போது, பண்டமாற்றுக்கான ஒரு தாயேடு 1964ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24ம் திகதி கையொப்பமிடப்பட்டது. இத் தாயேட்டின் படி, வர்த்தகமானது இருபக்கத்தும் ஏறக்குறைய 1120 இலட்ச ரூபாய்கள் பெறு மதிக்கு விரிவடைய இருநாடுகளும் ஒத்துக்கொண்டன. சீன இலங்கையிடமிருந்து 38,000 தசாம்ச தொன்கள் கொண்ட, ஏறக்குறைய 450 இலட்ச ரூபாய்கள் பெறு மானமுள்ள இரப்பரைக் கொள்வனவு செய்வதற்கும், இலங்கை சீனவிடமிருந்து, அதேயளவு பெறுமானமுள்ள 200,000 தசாம்ச தொன்கள் அரிசியைச் கொள் வனவு செய்வதற்கும் உரிய பொறுப்பேற்றங்களை இவ்வுடன்படிக்கையானது உட் படுத்தியுள்ளது.

---

(1) வரவு செலவுத் திட்ட உரை 1964/65 பக்கம் 56.

ஜர்மன் ஜனநாயகக் குடியரசு: (கிழக்கு ஜர்மனி) சித்திரை 22, 1961ம் ஆண்டு முடிவடைந்த முன்னைய ஒப்பந்தத்தினிடமாக, 1961ம் ஆண்டு மார்கழி மாதம் 14ம் திகதியில் புதிய வர்த்தக ஒழுங்கொன்று கடிதங்கள் பரிமாறுதல் மூலமாக ஜர்மன் ஜனநாயகக்குடியரசுடன் நிறைவேற்றப்பட்டது. ஏற்கத்தக்க தன்மைத்தான இப் புதிய ஒழுங்கு துவக்கத்திலே ஒரு ஆண்டிற்குச் செல்லுபடியாக விருந்ததாயினும் தன்னளவிலேயே மேலும் ஒவ்வொரு ஆண்டு காலப் பகுதிக்கும் நீடிக்கக் கூடியதாகவிருந்தது. இது, இரு நாடுகளுக்குமிடையில் பரிமாறுதலுக்குரிய பொருட்களின் திருத்தியமைக்கப்பட்ட பட்டியல்களுக்கும் இடமளித்தது. இலங்கை ஏற்றுமதிகளின் பட்டியல் அதின் சில புதிய கைத்தொழிற் பொருட்களையும் உள்ளடக்கும். இவ்வொழுங்கை அமுலுக்குக் கொண்டுவருவதால் ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்வதற்குத் தேவையெனின் இரு நாட்டுப் பிரதிநிதிகளும் கலந்த ஒரு குழுவை நியமிப்பதற்கு இவ்வொழுங்கு இடமளித்தது. குறிப்பாக 1965ம் ஆண்டு வர்த்தக அபிவிருத்தியையே பற்றிய வேறு கடிதங்கள் பரிமாறப்பட்ட பிரதான கடிதங்களை நிவர்த்தி செய்தன.

## விலைவாசிகளும் கூலிகளும்

விலைவாசிகள்:

கொழும்புத் தொழிலாளர் வர்க்கக் குடும்பங்களின் வரவு செலவு சம்பந்தமாக வேறு குறிகாட்டிகள் இல்லாதமையினால், குடிசன மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தால் கணிக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட மாற்றங்களை அளவிடுவதற்கு உபயோகிக்கப்பட்டுள்ளது. இக் குறிக்காட்டியில் உட்படும் பொருட்களின் அளவுப் பிரமாணங்கள் (கீழ்க்காணும் அட்டவணையின் ஓடைப் பிரிவுகளின் தலையில் உள்ள எண் தொகைகளைப் பார்க்கவும்) 1953ம் ஆண்டின் VIவது பருவப் பத்திரத்தின் சிபார்சுகளை ஆதாரமாகக் கொண்டவையாகும்.

பின்வரும் அட்டவணை, இந்நுகர்வோர் விலைக்குறிகாட்டியில் 1955ம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட மாற்றங்களைப் பொருட்களின்படியும், துறைகளின்படியும் பிரித்துக் காட்டுகின்றது.

அட்டவணை II இ—1

### கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி
### (1952=100)

| வருடம் | சகல விடயங்களும் | பொருட்களின்படி | | | | | துறைகளின்படி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உணவு (61·9%) | உடை (9·4%) | எரிபொருள் விளக்கு (4·3%) | வாடகை (5·7%) | ஏனைய (18·7%) | உள்நாட்டுத் தொகுதி (51%) | இறக்குமதித் தொகுதி (44%) | ஏற்றுமதித் தொகுதி (5%) |
| 1955 .. | 100·5 | 105·1 | 80·5 | 102·3 | 101·5 | 94·6 | 98·4 | 102·8 | 102·2 |
| 1956 .. | 100·2 | 103·3 | 81·8 | 101·3 | 101·5 | 98·6 | 100·0 | 99·0 | 115·1 |
| 1957 .. | 102·8 | 104·9 | 84·4 | 97·3 | 101·5 | 106·9 | 104·9 | 98·1 | 126·8 |
| 1958 .. | 105·0 | 105·8 | 87·5 | 101·0 | 101·5 | 113·1 | 109·2 | 97·0 | 135·0 |
| 1959 .. | 105·2 | 104·7 | 92·1 | 102·4 | 101·5 | 115·3 | 108·0 | 97·1 | 153·1 |
| 1960 .. | 103·5 | 100·8 | 95·1 | 102·7 | 101·5 | 117·5 | 108·9 | 93·7 | 138·4 |
| 1961 .. | 104·8 | 99·8 | 103·9 | 104·4 | 101·5 | 122·8 | 112·3 | 94·6 | 119·1 |
| 1962 .. | 106·3 | 100·9 | 108·2 | 105·6 | 101·5 | 124·9 | 113·9 | 96·7 | 113·8 |
| 1963 .. | 108·8 | 103·0 | 118·2 | 103·0 | 101·5 | 126·6 | 113·4 | 102·5 | 117·7 |
| 1964 .. | 112·2 | 106·4 | 127·2 | 103·2 | 101·5 | 129·3 | 116·7 | 106·6 | 115·3 |

மூலங்கள்: குடிசன மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,
ஸ்ரீலங்கா மகாவங்கி